# 3. வேளாண்மை மீன்பிடி காடாக்கல்

## 3.1 உற்பத்திப் போக்குகள்

1998 இல் பொதுவான வேளாண்மை வெளியீடு 2.5 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. இது 1997இல் பதிவு செய்யப்பட்ட 3 சதவீத வளர்ச்சியைத் தொடர்ந்து ஏற்பட்டதாகும். நெல் உற்பத்தியின் 20 சதவீத கணிசமான அதிகரிப்பும் தேயிலைத்துறையின் உச்ச உற்பத்தியும் வேளாண்மைத் துறையின் உயர்வளர்ச்சி வீதத்திற்குப் பங்களிப்புச் செய்தன. விதைக்கப்பட்ட பரப்பளவில் ஏற்பட்ட அதிகரிப்பும் விளைச்சலில் காணப்பட்ட மேம்பாடும் நெல் வெளியீட்டின் அதிகரிப்புக்குப் பங்களிப்புச் செய்தன. முன்னைய ஆண்டின் உச்ச உற்பத்தியின் 1 சதவீத மேம்பாட்டுடன் இவ்வாண்டில் தேயிலை உற்பத்தி புதிய உச்ச மட்டமொன்றினைப் பதிவு செய்தது. ஆண்டின் முதலரைப் பகுதியில் தேயிலை விலைகள் சிறப்பாகக் காணப்பட்டன. எனினும் ஆண்டின் பின்னரைப் பகுதியில் ரஷ்யா ரூபிள் நெருக்கடி மற்றும் ஏனைய தேயிலை உற்பத்தி செய்யும் நாடுகளின் தேயிலை வெளியீட்டின் அதிகரிப்பு என்பனவற்றைத் தொடர்ந்து ஆண்டின் இரண்டாம் அரைப்பகுதியில் தேயிலை விலைகள் வீழ்ச்சியடையத் தொடங்கின. தொடர்ச்சியாக வீழ்ச்சியடைந்து செல்லும் விலைகளின் முதன்மைக் காரணத்தினால் இறப்பர் உற்பத்தி 9 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்த வேளையில் 1997இல் நிலவிய எல் - நினோ காலநிலையின் காலங்கடந்த தாக்கத்தின் காரணமாக தெங்கு உற்பத்தி 3 சதவீத வீழ்ச்சியினைப் பதிவு செய்தது. மிளகு, கொக்கோ, கோப்பி, ஏலம், சாதிக்காய் மற்றும் கறுவா எண்ணெய் என்பன வெளியீடு அதிகரிப்புக்களைப் பதிவு செய்தமையின் காரணமாக ஏனைய ஏற்றுமதிப் பயிர்களின் உற்பத்தி கணிசமான மேம்பாட்டைக் காட்டியது. இந்தப் பயிர்கள் சாதகமான விலைகளினால் நன்மையடைந்தன. ஏனைய களப் பயிர்கள் வகையில் எள்ளு, பாசிப்பயறு, தட்டைப்பயறு மற்றும் சோயா அவரை என்பனவற்றின் உற்பத்தி அதிகரித்த வேளையில் மிளகாய், சின்ன வெங்காயம், பெரிய வெங்காயம், உருளைக்கிழங்கு, போன்ற உயர் பெறுமதியுடைய பயிர்களின் வெளியீடு மிகத் தாழ்ந்த மட்டங்களுக்கு வீழ்ச்சியடைந்தது. வேளாண்மைப் பண்டங்கள் தொடர்பாக வர்த்தகக் கொள்கையின் முழுமையான தாராளமயமாக்கலின் காரணமாக இந்தியா, பாக்கித்தான் ஆகிய நாடுகளிலிருந்தான மலிவான இறக்குமதிகளுடன் உயர் செலவுடைய உள்நாட்டு உற்பத்தியாளர்கள் போட்டியிட இயலாது காணப்பட்டமையே இதற்கான காரணமாகும். குறிப்பாக உள்ளூர் மீன்பிடித்துறையின் மேம்பாட்டின் காரணமாக இவ்வாண்டில் மீன் உற்பத்தி 8 சதவீதத்தினால் அதிகரித்தது. 1998இல் கால்நடை வளர்ப்புத்துறை மேம்பாடொன்றைக் காட்டியது.

**அட்டவணை 3.1**
**முக்கிய வேளாண்மை விடயங்களின் உற்பத்தியும் விலை மாற்றங்களும்**

| விடயம் | அலகு | உற்பத்தி | | 1997/98இல் மாற்றம் (%) | |
|---|---|---|---|---|---|
| | | 1997 | 1997 | உற்பத்தி | விலை |
| தேயிலை | மில்.கி.கி. | 277 | 280 | 1 | 13 |
| இறப்பர் | மில்.கி.கி. | 106 | 96 | -9 | -12 |
| தெங்கு | மில்.காய்கள் | 2,631 | 2,547 | -3 | 8 |
| நெல் | '000மெ.தொ. | 2,239 | 2,692 | 20 | -7 |
| சீனி | '000மெ.தொ. | 63 | 61 | -3 | -3 |
| மீன் | '000மெ.தொ. | 240 | 260 | 8 | -2 |

மூலங்கள்: இலங்கை மத்திய வங்கி.
தொடர்பான அதிகார சபைகள்.

## 3.2 வேளாண்மைக் கொள்கை

பெருந்தோட்டமல்லா வேளாண்மைத்துறை தொடர்பான கொள்கையானது 1995 இல் விவசாய அமைச்சினால் தயாரிக்கப்பட்ட தேசிய கொள்கை வரைச் சட்டத்தில் குறித்துரைக்கப்பட்ட கொள்கையினைச் சுற்றிச் சுழல்வதாகவே காணப்பட்டது. ஏனையவற்றுக் கிடையில், தரம்மிக்க விதைகள் மற்றும் பயிர்ச் செய்கைப் பொருட்களின் வழங்கல், விவசாய விரிவாக்கப் பணிகளைச் சீரமைத்தல், கொள்கைக் குறிக்கோள்களை எய்துவதற்காக அரசதுறையினால் ஆதரவு வழங்கப் பட்டு வேளாண்மைத் துறையினை அபிவிருத்தி செய்வதில் தனியார் மற்றும் அரசல்லா நிறுவனங்களின் ஒருங்கிணைப்பு என்பனவற்றை தேசிய கொள்கை வரைச்சட்டம் வலியுறுத்தியது. தேசிய கொள்கை வரைச் சட்டத்துக்கு இசைந்து செல்லும் வகையில் தரமான விதைகளின் வழங்கலுக்கு வசதி செய்து கொடுப்பதற்காக வேண்டி இவ்வாண்டில் இங்குராக்கொடை விதைப் பண்ணை தனியார் மயமாக்கப்பட்டது. தேசிய விதை மற்றும் பயிர் செய்கைப் பொருட்கள் குழு விதைச் சட்டத்தினை பெரும்பாலும் முற்றுப் பெறச் செய்துள்ள தோடு இது வெகுவிரைவில் நடைமுறைப்படுத்தப்படும். மேலும் இவ்வாண்டில் தனியார் துறையைச் சேர்ந்த தொழில் முயற்சியாளர்களுக்கு விதை உற்பத்தி பயிற்சி நிகழ்ச்சித் திட்டமொன்றையும் குழு நடாத்தியது.

பெருந்தோட்டத்துறையில் 1995இல் தொடங்கப்பட்ட அரசுக்குச் சொந்தமான பிராந்திய பெருந்தோட்டக் கம்பனிகளின் தனியார் மயமாக்கல் 1998இல் மேலும் தொடர்ந்தது. இவ்வாண்டில் பலாங்கொடை பெருந்தோட்டத்துக்குச் சொந்தமான பங்குகளில் 39 சதவீதமானவை கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையின் ஊடாக பொதுமக்களுக்கு விற்பனை செய்யப்பட்டன. (இவற்றுள் 20 சதவீதமான பங்குகள் பங்கொன்று ரூ.20 வீதத்திலும், எஞ்சிய 19 சதவீதப் பங்குகள் பங்கொன்று ரூ.61 வீதத்திலும் விற்பனை செய்யப்பட்டன.) இதே வேளையில் 4 கம்பனிகளின் 20 சதவீதமான பங்குகளும் அதாவது மடுல்சீமை

பெருந்தோட்டம் (பங்கொன்று ரூ.15) அப்புகஸ்தன்ன பெருந்தோட்டம் (பங்கொன்று ரூ.10) உடபுசல்லாவ பெருந்தோட்டம் (பங்கொன்று ரூ.10) பொதுமக்களுக்கு விற்பனை செய்யப்பட்டன. மேலும் வட்டவளைப் பெருந்தோட்டம் (பங்கொன்று ரூ.60.75) மஸ்கெலியா பெருந்தோட்டம் (பங்கொன்று ரூ.45) என்பனவற்றின் 15 சதவீதப் பங்குகளும் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையின் ஊடாகப் பொதுமக்களுக்கு விற்பனை செய்யப்பட்டன. முதலாம் அரைப் பகுதியில் உயர் மட்டங்களிலும் இரண்டாம் அரைப்பகுதியில் வீழ்ச்சியடைந்தும் காணப்பட்ட பெருந்தோட்டக் கம்பனிகளின் பங்கு விலைகள் தேயிலை விலைகளின் மாற்றங்களை பிரதிபலிப்பதாக இருந்தன.

பெரும்பாலான நாடுகளின் கைத்தொழில் மயமாக்கலுக்கு அதிகரித்த வர்த்தக மயமாக்கலுடனான விவசாயத்துறையின் நீண்டகால நிலைத்து நிற்கக் கூடிய அபிவிருத்தியானது முற்படு தேவையாகக் காணப்பட்டது. குறிப்பாக உள்நாட்டு விவசாயத்துறையில் அரசாங்கத் தலையீடு உயர்வாகக் காணப்பட்ட இலங்கையில் இது நிகழவில்லை. நெல் விவசாயிகளின் உண்மை வருமானம் ஆண்டு தோறும் வீழ்ச்சியடைந்து வந்துள்ளது. நெல்லின் உற்பத்தியாளர் விலை, பொதுவான நுகர்வோர் விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்பு மற்றும் கூலியை உள்ளடக்கிய வேளாண்மை உள்ளீடுகளின் செலவில் ஏற்பட்ட அதிகரிப்பைவிட குறைந்த வீதத்தில் அதிகரித்தது. சில நெற்றுறைத் தொழிலாளர்கள் கடந்த 5 தொடக்கம் 6 வருடங்களாக அவர்களது உண்மைக் கூலி வீழ்ச்சிகள் 1-2 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளதை உணர்த்துகின்றனர். இது விவசாயத்திலிருந்து தொழிலாளர் இடம் பெயர்தலை ஏற்படுத்தியுள்ளது. எனினும், விவசாய உற்பத்தியாக்கத்தில் கணிசமான மேம்பாடொன்று ஏற்படவில்லை. பதிலாக பாரிய எண்ணிக்கையைக் கொண்ட பெண்கள் வெளிநாட்டுக்கு தொழிலுக்காகச் செல்வதன் காரணமாக நாற்று நடுகை, களை எடுத்தல், அறுவடை போன்ற சில விவசாய நடவடிக்கைகளைப் பாதித்துள்ளதோடு தாழ்ந்த உற்பத்தியாக்கத்திற்கும் இட்டுச் சென்றுள்ளது. தொழிலாளர் நாட்டிலிருந்து வெளியே சென்றுள்ளமை யானது கூலி அதிகரிப்புக்களுக்கும் இட்டுச் சென்றுள்ளமையினால் நாடு நெல் மற்றும் ஏனைய வேளாண்மைப் பண்டங்களின் செலவு மிக்க உற்பத்தியாளராக மாறியுள்ளதுடன் சில வேளாண்மைப் பண்டங்களின் போட்டித் தன்மையினையும் குறைத்துள்ளது. விவசாயத் தொழிலாளர்களின் தற்போதைய பற்றாக் குறையினையும் வயது செல்லும் சனத்தொகையின் காரணமாக இந்தப் பிரச்சனை மோசமடைவதையும் எதிர் கொள்வதற்காக வேண்டி விவசாய நடவடிக்கை களின் அதிகரித்த பொறிமயப்படுத்தலுடன் உழைப்புச் சேமிப்புக்கான உபாயங்களை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும். விவசாயத்தில் பொறிமயப்படுத்தல் நிகழ்வதற்கு வர்த்தகம் சார்ந்த தனியார்துறையின் பங்கேற்பு அத்தியாவசியமானதாகும். இந்தவகை அபிவிருத்திக்கான முக்கிய தடையாகக் காணப்படுவது யாதெனில் விவசாய காணிகள் மேலதிகமாகத் துண்டிக்கப்படுவதாகும். தற்போது நெற்காணிகளின் 90 சதவீதத்திற்கும மேலானவை இரண்டு எக்டேயர்களுக்கும் குறைவான அளவினைக் கொண்டவையாகும். அத்தகைய சிறிய காணித்துண்டுகளில் பொறிமயப்படுத்தப்பட்ட விவசாயமானது பொருளாதார நன்மை பயக்கக் கூடியது அல்ல. பொறிமயப்படுத்தப்பட்ட விவசாயத்தினை ஊக்குவிப்பதற்கு காணி ஒருங்கிணைப்பு நிகழ்ச்சித் திட்டமொன்று தொடக்கி வைக்கப்படல் வேண்டும். சிறு காணித்துண்டுகளை பொருளாதார நன்மை தரக்கூடிய அளவொன்றுக்கு ஒட்டியுள்ள உடைமையாக ஒன்றிணைப்பது ஆதாயவன்மையுடையதாக இருப்பதோடு செயல் திறனையும் வெளியீட்டையும் அதிகரிக்கச் செய்யும். இதன் மூலம் சிறு விவசாயிகளின் வாழ்க்கைத்தரத்தினை மேம்படுத்தக் கூடியதாக இருக்கும். இந்தக் கொள்கையினைத் தொடரும் வகையில் ரிதிபென்திஎல, மற்றும் சந்திரிகா வெவ நீர்ப்பாசனத் திட்டங்களில் 1997 இலிருந்து நடைமுறைப்படுத்தப்பட்ட காணி ஒருங்கிணைப்பு முன்னோடிச் செயற்றிட்டம் 1998 முழுவதும் தொடர்ந்தது. வேளாண்மை உற்பத்திகள் தொடர்பான வர்த்தகக் கொள்கையும், உருளைக்கிழங்கு, வெங்காயம் மற்றும் செத்தல் மிளகாய்க்கான அளவக் கட்டுப்பாடுகள் (உரிமத் தேவைப்பாடு) நீக்கப்படும்வரை புலப்பாடு உடையதாகக் காணப்படவில்லை. நுகர்வோரின் பெரும் பங்கினரின் செலவில் விவசாயிகளை அதிகமாகப் பாதுகாப்பதற்கு உரிம பொறிமுறையினூடாக அவ்வப்போது இறக்குமதிக் கட்டுப்பாடுகளைக் கொண்டு வருவதே இக் கொள்கையாகும். இக் கொள்கை கைவிடப்பட்டு தற்போதைய தீர்வை அமைப்பின் கீழ் தீர்வைகளைக் கூடிய வீதத்தில் வைத்திருப்பதன் மூலம் விவசாயத்துறைக்கு தீர்வையுடான பாதுகாப்பு வழங்கப் படுகின்றது. விதை உற்பத்தியை அதிகரிப்பதற்கும் 1998 வரவு செலவுத் திட்டத்தில் ஊக்குவிப்புக்கள் வழங்கப் பட்டன. விவசாய உற்பத்தித் திறனை ஊக்குவிப்பதற்கு முன்னேற்றம் கண்ட உள்நாட்டு உற்பத்திப் பொருட் களூடாகவோ அல்லது இறக்குமதிகளினூடாகவோ முன்னேற்றமடைந்த விதைகள் பாவிக்கப்பட வேண்டுமென்பது தெளிவாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

## 3.3 ஏற்றுமதிப்பயிர்கள்

### தேயிலை

கடந்த சில ஆண்டுகளில் மேல் நோக்கிய போக்கினைப் பதிவு செய்த தேயிலை உற்பத்தி 1998 இல் தொடர்ந்தும் இதே போக்கினைக் கொண்டிருந்தது.

தொடர்ச்சியான ஐந்தாவது ஆண்டிலும் தேயிலை உற்பத்தி புதிய உச்ச உற்பத்தி மட்டமொன்றைப் பதிவு செய்தது. முன்னைய ஆண்டின் உச்ச உற்பத்தியை 1 சதவீதத்தினால் விஞ்சும் வகையில் 280 மில்லியன் கிலோக் கிராம்களை எய்தியது. இந்த அதியுயர் உற்பத்தியானது உயர்நில மற்றும் இடைநில உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சியின் மத்தியிலும் எய்தப்பெற்ற தொன்றாவதோடு தாழ் நிலப் பிரதேசங்களில் பதிவு செய்யப்பட்ட மேம்பட்ட செயலாற்றத்தின் ஊடாகவே பெறப்பட்டது. ஆண்டின் முதலரைப்பகுதியில் காணப்பட்ட கவர்ச்சிகரமான விலைகளுடன் இணைந்து மழை வீழ்ச்சியின் சிறப்பான பரம்பலும் காணப்பட்டமையினால் வளமாக்கிகளின் அதிகரித்த பாவனைக்கு வசதியாக இருந்ததுடன் இலங்கையின் தேயிலை உற்பத்தியின் பொதுவான மேம்பாட்டுக்கும் பங்களிப்புச் செய்யப்பட்டது. இலங்கையில் தேயிலைக் கைத்தொழிலினால் பெறப்பட்டுவந்த சிறப்பான தேயிலை விலைகள் 1998இன் முதலரைப்பகுதியில் தொடர்ந்தும் காணப்பட்ட போதிலும் ரூபிள் நெருக்கடியின் பின் ருசியாவின் அதிகரித்த பொருளாதாரப் பிரச்சினைகள் மற்றும் இந்தியா, கென்யா போன்ற முக்கிய தேயிலை உற்பத்தி செய்யும் நாடுகளின் உற்பத்தியில் கணிசமான அதிகரிப்பின் காரணமாக உலக தேயிலை விலைகளில் ஏற்பட்ட வீழ்ச்சி என்பனவற்றின் காரணமாக இரண்டாம் அரைப்பகுதியின் தொடக்கத்திலிருந்து வீழ்ச்சியடையத் தொடங்கின. கடந்த மூன்று ஆண்டுகளிலும் ருசியாவுக்கான தேயிலை ஏற்றுமதிகள் இலங்கையின் தேயிலை ஏற்றுமதிகளின் 20 சதவீதத்திற்கு வகை கூறின. ருசியாவுக்கான நேரடி தேயிலை ஏற்றுமதிகள் 1997 இன் 49 மில்லியன் கிலோக் கிறாம்களிலிருந்து 1998இல் 38 மில்லியன் கிலோக்கிறாம்களுக்கு வீழ்ச்சியடைந்தன.

தேயிலை உற்பத்தியின் அதிகரிப்பு தாழ் நிலங்களிலிருந்தே பெறப்பட்டது. எல்நினோ கால நிலையின் காரணமாக 1997 இல் வீழ்ச்சியைக் காட்டிய தாழ் நிலத் தேயிலை வெளியீடு 1998இல் 11 சதவீதத்தினால் அதிகரித்து என்றுமில்லாத வகையில் 150 மில்லியன் கிலோக்கிறாம்களை எய்தியது. இது மொத்த வெளியீட்டின் 54 சதவீதமாகும். இதே வேளையில் கடந்த ஆண்டில் மேம்பாடுகளைக் காட்டிய உயர் நில மற்றும் மத்திய நில வெளியீடு பின்னடை வினைக் கொண்டிருந்தது. 1997ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் உயர்நில உற்பத்தி 9 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்த வேளையில் மத்திய நிலப் பிரதேசங் களின் உற்பத்தி 6 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது.

தேயிலை சிறு உடைமையாளர் துறையின் உற்பத்தி தொடர்ந்தும் உறுதியாக அதிகரித்ததோடு 1998 இல் மேலும் 11 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்தது. தேசிய வெளியீட்டில் சிறு உடைமையாளர் களின் பங்கு 1997இன் 54 சதவீதத்திலிருந்து 61 சதவீதத்திற்கு அதிகரித்தது. 1998இல் சிறு உடைமையாளர்துறையின் சராசரி விளைச்சல் 11 சதவீதத்தினால் எக்டேயர் ஒன்றிற்கு 2192 கிலோக் கிறாம்களுக்கு அதிகரித்தது. இதே வேளையில் தோட்டத்துறையில் வெளியீட்டு விளைச்சல் மந்தமாகவும் திருப்திகரமற்றதாகவும் காணப்பட்டது. இது கிட்டத்தட்ட சிறு உடைமையாளர் துறையின் விளைச்சல் மட்டத்தின் (48 சதவீதம்) அரைவாசியாகும்.

**அட்டவணை 3.2**
**தேயிலைத் துறை மீதான புள்ளி விபரங்கள்**

| விடயம் | அலகு | 1996 | 1997(அ) | 1998(ஆ) |
|---|---|---|---|---|
| 1. உற்பத்தி | மில்.கி.கிறாம் | 258 | 277 | 280 |
| உயர் நிலம் | மில்.கி.கிறாம் | 72 | 84 | 76 |
| மத்திய நிலம் | மில்.கி.கிறாம் | 48 | 57 | 54 |
| தாழ் நிலம் | '000எக்டேயர் | 138 | 136 | 150 |
| 2. நிலப்பரப்பு (இ) | | | | |
| மொத்த நிலப்பரப்பு | '000எக்டேயர் | 189 | 194 | 195 |
| விதைக்கப்பட்டநிலப்பரப்பு | '000எக்டேயர் | 174 | 177 | 180 |
| 3. வளமாக்கிப் பாவனை | '000மெ.தொன் | 154 | 160 | 182 |
| 4. மீள் நடுகை | எக்டேயர் | 937 | 931 | 1239 |
| 5. புதிய பயிரிடுகை | எக்டேயர் | 479 | 327 | 411 |
| 6. விலைகள் | | | | |
| கொழும்பு(தேறிய) | ரூபா/கி.கி. | 103.88 | 119.40 | 134.35 |
| ஏற்றுமதிகள்(க.ஏ.பெ.) | ரூபா/கி.கி. | 139.56 | 158.39 | 184.94 |
| 7. உற்பத்திச் செலவு | ரூபா/கி.கி. | 87.04 | 93.47 | 106.72 |
| 8. ஏற்றுமதிகள் | ரூ.மில்.கி.கி. | 244 | 269 | 272 |
| 9. ஏற்றுமதி வருவாய்கள் | ரூ.மில் | 34,068 | 42,533 | 50,280 |
| | அ.டொ.மில். | 615 | 719 | 780 |
| 10. மொத்த உள்நாட்டு உற்பத்தியின்சதவீதமாகக் கூட்டப்பட்டபெறுமதி (ஈ) | | 2.2 | 2.3 | 2.6 |

மூலங்கள்: இலங்கைத் தேயிலைச் சபை
தேசிய வளமாக்கிச் செயலகம்.
இலங்கை மத்திய வங்கி.

(அ) திருத்தப்பட்டது.
(ஆ) தற்காலிகமானவை)
(இ) தேயிலை ஆணையாளர் பிரிவினால் 1994/95 இல் மேற்கொள்ளப்பட்ட அளவையின் அடிப்படையில அமைந்தவை. (கைவிடப்பட்ட தேயிலை நிலங்கள் உள்ளடங்காது)
(ஈ) பயிரிடலும் பதனிடலும் மட்டும்.

தேசிய சராசரி விளைச்சல் எக்டேயர் ஒன்றுக்கு 1,559 கிலோக் கிறாம்களாகும். இது ஏனைய போட்டி நாடுகளான இந்தியா, கென்யா, என்பனவற்றின் விளைச்சல் மட்டங்களை விட மிகத் தாழ்வானதாகும். இந்த நாடுகளின் விளைச்சல் மட்டங்கள் முறையே எக்டேயர் ஒன்றுக்கு .2,284 கிலோக் கிறாம்களும் 1,850 கிலோக்கிறாம்களுமாகும். சிறு உடைமையாளர் துறையின் பயிரிடப்பட்ட 100 சதவீத பரப்பும் தளிர்ப்புப் பெருக்க தேயிலை விதைகளால் பயிரிடப்பட்டுள்ளமை யுடன் ஒப்பிடுகையில் பாரிய நிலப்பரப்புக்களில் குறை விளைச்சல் கொண்ட விதைகள் பயிரிடப்பட்டுள்ளமையே தோட்டத்துறையின் மோசமான வெளியீட்டு மட்டத்துக்குக் காரணமாகக் குறிப்பிடப்படுகின்றது. விலைகள் வீழ்ச்சியடைந்து சென்றாலும் கூட தேயிலைக் கைத்தொழில் பொருளாதார வளமுள்ளதாகவும்

போட்டித் தன்மை கொண்டதாகவும் இருக்க வேண்டுமேயானால் விளைச்சல் உறுதியாக அதிகரிக்கப்படல் வேண்டும். தேயிலை விளைச்சலை தளிர்ப்புப் பெருக்க விதைகளினால் மாற்றீடு செய்தல் வேண்டும். விளைச்சலை மேம்படுத்துவதற்கு குறிப்பாக பெருந் தோட்டக் கம்பனிகளின் விளைச்சல் குறைந்த தேயிலை விதைகளை தளிர்ப்புப் பெருக்க தேயிலை விதைகளினால் மாற்றீடு செய்தல் வேண்டும்.

1995 இலிருந்து தேயிலைத் துறையின் வளமாக்கிப் பிரயோகம் உறுதியாக அதிகரித்து வந்துள்ளது. 1998இல் வளமாக்கிப் பிரயோகம் 12 சதவீதத்தினால் அதிகரித்து என்றுமில்லாத வகையில் 181,800 மெற்றிக் தொன் மட்டத்தினை எய்தியது. தேயிலை சிறு உடைமையாளர் அபிவிருத்தி அதிகார சபையினால் நடைமுறைப்படுத்தப்பட்ட வளமாக்கிக் கடன் திட்டத்தின் கீழ் 1997இல் 60 சதவீதத்தினால் அதிகரித்த வளமாக்கிப் பகிர்ந்தளிப்பு 1998 இல் மேலும் 9 சதவீத மேம்பாட்டைக் காட்டியது.

1995 இன் பிற்பகுதியில் தொடங்கிய தேயிலை விலைகளின் மேல் நோக்கிய போக்கு 1998 ஒகத்து வரையிலும் தொடர்ந்து காணப்பட்டது. அதன் பின்னர் கிலோக்கிறாம் ஒன்று ஒகத்தில் சராசரி ரூ.136.52 இலிருந்து திசெம்பரில் கிலோக்கிறாம் ஒன்று ரூ.117.47 இற்கு பெருமளவில் வீழ்ச்சியடைந்தது. ருசியாவிற்கான நேரடித் தேயிலை ஏற்றுமதியினைப் பாதித்த ருசியாவின் பொருளாதாரப் பிரச்சனைகளுக்கு மேலதிகமாக 1997 இன் வரட்சியினால் பாதிக்கப்பட்ட கென்யாவின் தேயிலை உற்பத்தி கிட்டத்தட்ட 30 சதவீதத்தினால் மீட்சி பெற்றமையின் காரணமாக உலக தேயிலை வழங்கலும் கணிசமாக மேம்பாடடைந்தது. உலக தேயிலை விலைகளின் கீழ் நோக்கிய போக்கிற்குப் பங்களிப்புச் செய்யும் வகையில் இந்தியாவின் தேயிலை உற்பத்தியும் அதிகரித்தது. எனினும் கொழும்பு ஏலத்தில் அனைத்துத் தேயிலைகளினதும் ஆண்டுக்கான தேறிய சராசரி விற்பனைகள் கிலோக் கிறாம் ஒன்றுக்கு ரூ.134.35 இற்கு 13 சதவீத அதிகரிப்பைக் காட்டியதுடன் ஆண்டின் முதலரைப்பகுதியில் நிலவிய மிகச் சிறப்பான விலைகளின் காரணமாக ரூபா நியதிகளில் அதி உயர் விலையினையும் எய்தியது. ஆண்டுச் சராசரி ஏற்றுமதி விலையும் 17 சதவீதத்தினால் மேம்பாடடைந்து அதி உயர் விலை மட்டமான கிலோக்கிறாம் ஒன்று ரூ.184.94 இனை எய்தியது.

ஏற்றுமதி செய்யப்பட்ட தேயிலையின் அளவு 1 சதவீதத்தினால் 272 மில்லியன் கிலோக்கிறாம்களுக்கு அதிகரித்தது. இது மேம்பட்ட விலைகளுடன் இணைந்து ஏற்றுமதி வருவாய்களை 18 சதவீதத்தினால் ரூ.50,300 மில்லியனுக்கு மேம்பாடடையச் செய்தது. மூன்றாவது தொடர்ச்சியான ஆண்டிலும் சுதந்திர நாடுகளின் பொதுநலவாயத்தைச் சேர்ந்த நாடுகளே இலங்கையின் முதன்மைத் தேயிலை கொள்வனவாளராக விளங்கி ஏற்றுமதிகளின் மொத்தப் பங்குகளில் 16 சதவீதத்திற்கு வகை கூறின. மூன்று முக்கிய கொள்வனவாளர்களான சுதந்திர நாடுகளின் பொதுநலவாயம், ஐக்கிய அரபு எமிரேட்ஸ் மற்றும் துருக்கி ஆகிய நாடுகள் மொத்த ஏற்றுமதிகளில் பெரும்பாலும் 40 சதவீதத்தினைக் கொள்வனவு செய்தன.

**வரைபடம் 3.1**
**விலை, உற்பத்திச் செலவுச் சுட்டெண்கள் - தேயிலை (1990=100)**




இலங்கையின் தேயிலைத்துறை இன்னமும் அமைப்புப் பிரச்சனைகள் சிலவற்றை எதிர் நோக்குகின்றது. விரைந்து அதிகரிக்கும் உற்பத்திச் செலவானது 1998இல் தொடர்ந்தும் ஒரு பிரச்சனையாக விளங்கியது. அரசுக்குச் சொந்தமான பெருந் தோட்டங்களினதும் 21 பெருந்தோட்டக் கம்பனிகளினதும் தயாரித்த தேயிலையின் நிறையேற்றப்பட்ட சராசரி உற்பத்திச் செலவு 14 சதவீதத்தினால் கிலோக்கிறாம் ஒன்றுக்கு ரூ. 106.72 இற்கு அதிகரித்தது. ரூ. 83 இலிருந்து (மற்றும் ரூ.10 ஆகக் கூடிய விலை பங்கு மிகையூதியம்) ரூ.101 இற்கு (ரூ.95 நாளாந்த கூலிவீதம் மற்றும் ரூ.6 விலை பங்கு மிகை ஊதியம்) நாளாந்தக் கூலியின் அதிகரிப்பானது இவ்வாண்டில் உற்பத்திச் செலவினை உயர்த்தியது. உற்பத்திச் செலவில் தொழிலாளர் செலவின் பங்கு 1997 இன் 59 சதவீதத்திலிருந்து மேலும் 66 திற்கு அதிகரித்தது. கொழுந்து தேயிலைக்கான கொடுப்பனவு கொழும்பு தேயிலை ஏலத்தின் விலைகளுடன் இணைக்கப்பட்ட சூத்திரம் ஒன்றின் அடிப்படையில் காணப்படுகின்றமையினால் தயாரிக்கப்பட்ட தேயிலைக்கு கொழும்பு ஏலத்தில் சராசரி விலைகளின் அதிகரிப்பின் காரணமாக கொழுந்து தேயிலைக்கான கொடுப்பனவும் அதிகரித்தது.

ஏனைய முக்கிய தேயிலை உற்பத்தி செய்யும் நாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கையில் தேயிலைக்கான பெறுமதி கூட்டல் சார்பு ரீதியில்

உயர்வாகக் காணப்பட்டபோதும் இன்னமும் தேயிலையின் பெரும்பங்கொன்று தொகை வடிவிலேயே ஏற்றுமதி செய்யப்படுகின்றது. 1998இல் தொகை வடிவிலான தேயிலை ஏற்றுமதிகள் மொத்த ஏற்றுமதித் தொகையில் 59 சதவீதத்திற்கு வகை கூறின. தேயிலை பயிரிடலில் 130 வருடங்களுக்கும் மேலான அனுபவத்தைக் கொண்டுள்ள இலங்கை சந்தைப் படுத்தல் சம்பந்தப்பட்ட விடயத்தில் போதுமான அளவு கவனம் செலுத்தவில்லை எனத் தோன்றுகின்றது. உலகப் பிரசித்தி பெற்ற இரண்டு உள்நாட்டுத் தேயிலை வர்த்தகப் பெயர்கள் மட்டுமே காணப்படுவதில் இது பிரதிபலிக்கின்றது. எனவே வர்த்தகப் பெயர்களை மேம்படுத்துவதில் அதிககவனம் செலுத்த வேண்டியது மிக முக்கியமாகும். குறிப்பாக சருவதேச போட்டித் தன்மை கொண்ட சூழல் ஒன்றில் "இலங்கைத் தேயிலைக்கு" சிறப்புச் சந்தையொன்றினை நிறுவுவதற்கு முயற்சி செய்தல் வேண்டும்.

பல ஆண்டுகளாக மீள் பயிரிடப்பட்ட பரப்பு குறைவடைந்தமைக்கான காரணம் யாதெனில் மரங்களைப் பிடுங்குவதனால் ஏற்படும் வருமான இழப்பாகும். மீள் பயிரிடப்படும் பரப்பினை அதிகரிப்பதற்கான ஊக்குவிப்பு ஒன்றாக 1998 யூலை 1ஆம் நாளிலிருந்து மீள் பயிரிடலுக்கான உதவிக் கொடுப்பனவு அதிகரிக்கப்பட்டுள்ளது. மூன்றாண்டுகளுக்குப் பிறகு மத்திய மற்றும் உயர் நிலப் பிரதேசங்களுக்கான மீள் நடுகை உதவிக் கொடுப்பனவு வீதங்கள் எக்டேயர் ஒன்றிற்கு ரூ.67,000 த்திலிருந்து எக்டேயர் ஒன்றுக்கு ரூ.110,000 திற்கு அதிகரிக்கப் பட்டுள்ள வேளையில் தாழ் நிலப் பிரதேசங்களில் அது ரூ.57,000 திலிருந்து ரூ.100,000 திற்கு அதிகரிக்கப் பட்டுள்ளது. இவ்வாண்டில் மீள் பயிரிடப்பட்ட பரப்பு 635 எக்டேயர்களாக விளங்கியதோடு தேயிலைச் சிறு உடைமையாளர் அபிவிருத்தி அதிகார சபையினால் பகிர்ந்தளிக்கப்பட்ட உதவிக் கொடுப்பனவு முன்னைய ஆண்டில் பகிர்ந்தளிக்கப்படட ரூ.30 மில்லியனுக்கு எதிராக ரூ.58 மில்லியனுக்கு அதிகரித்தது.

கடந்த 4 ஆண்டுக்காலமாக புதிய பயிரிடலுக்கான உதவிக் கொடுப்பனவில் எத்தகைய மாற்றமும் காணப்படவில்லை. அனைத்துவகை உயர் நிலங்களுக்கும் எக்டேயர் ஒன்றுக்கு ரூ.36,000 ஆக அது மாறாது காணப்பட்டது. இவ்வாண்டில் புதிதாகப் பயிரிடப்பட்ட பரப்பு 381 எக்டேயர்களாக விளங்கிய வேளையில் தேயிலை சிறு உடைமையாளர் அபிவிருத்தி அதிகார சபையினால் பகிர்ந்தளிக்கப்பட்ட உதவிக் கொடுப்பனவு ரூ.19.2 மில்லியனாக விளங்கியது. தேயிலை சிறு உடைமையாளர்களின் நன்மைக்காக தேயிலை சிறு உடைமையாளர் அபிவிருத்தி அதிகார சபையினால் மேற் கொள்ளப்பட்ட நடவடிக்கைகளில் சிறப்பு உள்ளீட்டு உதவிக் கொடுப்பனவு திட்டம், ஆலோசனை மற்றும் விரிவாக்கப் பணிகளின் வழங்கல் வளமாக்கிக் கடன் திட்டம், மற்றும் "தேயிலை சக்தி" சிறப்பு சேமிப்பு முதலீட்டுக் காப்புறுதித்திட்டம் என்பன உள்ளடங்கியிருந்தன. தேயிலை சிறு உடைமையாளர் களுக்கான "தேயிலை சக்தி" திட்டம் 1997 இல் அறிமுகப்படுத்தப்பட்டது. 1997 இன் 55,648 உறுப்பினர் களுக்கு எதிராக 1998 இறுதியில் உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கை 77,889 ஆகக் காணப்பட்டது. தேயிலை சக்தி நிதியம் மற்றும் 1998 வரவு செலவுத் திட்டத்தில் தேயிலை சிறு உடமையாளர் அபிவிருத்தி அதிகார சபைக்கு ஒதுக்கப்பட்ட நிதியம் என்பன வற்றைப் பயன்படுத்தி புதிய கடன் திட்டம் ஒன்றின் கீழ் தேயிலைக் கொழுந்தினைக் கொண்டு செல்வதற்காக தேயிலை சிறு உடைமையாளர் சங்கங்களுக்கிடையில் மொத்தம் 100 வாகனங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன.

தயாரிக்கப்பட்ட தேயிலையின் தரத்தினை மேம்படுத்தும் நோக்கில் 1998இல் தனியார் ஆலைச் சொந்தக்காரர்களினாலும் பெருந்தோட்டக் கம்பனி களினாலும் 60 நிறம் வேறுபடுத்தும் கருவிகள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. கம்பனிகள் இந்த முதலீட்டை மேற்கொள்வதற்கு ஆண்டின் முதலரைப் பகுதி வரை நிலவிய சிறப்பான தேயிலை விலைகள் இயலச் செய்தன.

தேயிலைக் கைத்தொழில் குறிப்பாக தாழ்நிலப் பிரதேசங்களில் கடுமையான தொழிலாளர் பற்றாக் குறையினைக் கொண்டுள்ளது. இந்தப் பற்றாக் குறையினை எதிர் கொள்ளும் நோக்கில் அண்மையில் தேயிலை ஆராய்ச்சிச் சபை கையால் கொழுந்து பறித்தலுக்குப் பதிலாக அறுவடைக் கத்தரிப்பு உபகரணம் ஒன்றை அறிமுகப்படுத்தியுள்ளது. குறிப்பாக தொழிலாளர் பற்றாக்குறை நிலவும் பிரதேசங்களில் இந்த உபகரணம் பிரபல்யம் பெற்று வருகின்றது. இந்த உபகரணத்தை தொழிற்படுத்துவதற்கு ஓரளவு தேர்ச்சியே போதும் என தேயிலை ஆராய்ச்சி நிறுவனம் கூறுவதோடு இது கையால் கொழுந்து பறிப்பதைவிட இலகுவானதாகையால் எத்தகைய விஷேட பயிற்சியும் தேவைப்படமாட்டாது.

300 ஆண்டுகளுக்கு மேலாகத் தொழிற்பட்டு வந்த இலண்டன் தேயிலை ஏலம் 1998 யூன் 29 ஆம் நாளிலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் தனது தொழிற்பாட்டை முடிவுக்குக் கொண்டு வந்தது. விலைக் குறிப்பீடுகள் ஏற்றுக்கொள்ளல் ஒப்பந்தங்களை உறுதிப்படுத்தல் என்பனவற்றுக்கு இன்றநெட் போன்ற புதிய தொழில் நுட்பங்களை பயன்படுத்தி உற்பத்தியாளர்களுக்கும் இறக்குமதியாளர்களுக்கு மிடையில் நேரடியாகவே வர்த்தகம் வளர்ச்சியடைந்த மையின் விளைவாக வர்த்தகத் தொகுதியில் தொடர்ச்சி யாக ஏற்பட்ட வீழ்ச்சியின் விளைவாக இலண்டன்

ஏலம் அழிந்து விட்டது எனக் கூறப்படுகின்றது. தற்போது உலகின் மிகப்பெரிய தேயிலை ஏல நிலையமாக கொழும்பு விளங்குகின்றது. இலண்டன் ஏலங்கள் மூடப்பட்டதால் வெற்றிடத்தை நிரப்புவதற்காக தமது நாடுகளில் ஏல நிலையங்களை திறப்பதற்கான சாத்தியம் தொடர்பாக பாக்கித்தான், துபாய், போன்ற ஏனைய நாடுகளும் கவனத்திற் கொண்டுள்ளன.

உலகன் மிகப்பெரிய தேயிலை ஏற்றுமதியாளர் என்ற தனது நிலைமையை இலங்கை பேணி வந்துள்ளது. 1998இல் உலக ஏற்றுமதிகளில் 271 மில்லியன் கிலோக்கிறாம்களுக்கு வகைகூறியது. அதனைத் தொடர்ந்து கென்யா விளங்கியது. (264 மில்லியன் கி.கிறாம்கள்)

## இறப்பர்

1996 இல் இருந்து வீழ்ச்சியுறும் போக்கினைக் காட்டிய இறப்பர் உற்பத்தி 1998இல் 96 மில்லியன் கிலோக் கிறாம்களுக்கு மேலும் 9 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. எக்டேயர் ஒன்றுக்கான விளைச்சலில் காணப்பட்ட வீழ்ச்சியும் 1998இன் இறுதிக் காலாண்டுப் பகுதியில் பலத்த மழையின் காரணமாக பால் எடுக்கும் நாட்கள் இழக்கப்பட்டமை என்பன உற்பத்தியின் தாழ்ந்த மட்டத்திற்குப் பெருமளவு காரணமாகின. கவர்ச்சியற்ற விலைகளும் சில இறப்பர் காணிகளில் பால் எடுத்தலைக்

**அட்டவணை 3.3**
**இறப்பர்த்துறை மீதான புள்ளி விபரங்கள்**

| விடயம் | அலகு | 1996 | 1997(அ) | 1998(ஆ) |
|---|---|---|---|---|
| 1. உற்பத்தி | மில்.கி.கிறாம் | 113 | 106 | 96 |
| 2. பரப்பளவு (இ) | | | | |
| பயிர்செய்கைக்குட்பட்ட | '000 எக்டேயர் | 162 | 163 | 158 |
| பால் எடுக்கும் | '000 எக்டேயர் | 122 | 129 | 125 |
| 3. விளைச்சல் | கி.கி./எக்டேயர் | 926 | 822 | 768 |
| 4. வளமாக்கிப் பயன்பாடு | '000 மெ.தொன் | 17 | 12 | 15 |
| 5. மீள் நடுகை | எக்டேயர் | 3,443 | 2,774 | 2,543 |
| 6. புதிய பயிரிடுகை (ஈ) | எக்டேயர் | 1,297 | 793 | 515 |
| 7. விலைகள் | | | | |
| ஏற்றுமதிகள் (க.ஏ.பெ.) | ரூபா/கி.கி. | 79.78 | 75.42 | 67.72 |
| கொழும்பு ஆர்.எஸ்.எஸ்.1 | ரூபா/கி.கி. | 67.85 | 56.62 | 49.76 |
| 8. உற்பத்திச் செலவு | ரூபா/கி.கி. | 36.70 | 40.37 | 44.41 |
| 9. ஏற்றுமதிகள் | மில்.கி.கிறாம் | 72 | 62 | 41 |
| 10. உள்நாட்டு நுகர்வு | மில்.கி.கிறாம் | 40 | 44 | 54 |
| 11. ஏற்றுமதி வருவாய்கள் | ரூ.மில் | 5,753 | 4,640 | 2,808 |
| | அ.டொ.மில். | 104 | 79 | 44 |
| 12. மொத்த உள்நாட்டு உற்பத்தியின்சதவீதமாகக் கூட்டப்பட்ட பெறுமதி(உ) | | 0.9 | 0.7 | 0.5 |

மூலங்கள்: இறப்பர் அபிவிருத்தித் திணைக்களம்.
தேசிய வளமாக்கிச் செயலகம்.
இலங்கை மத்திய வங்கி.

(அ) திருத்தப்பட்டது.
(ஆ) தற்காலிகமானவை.
(இ) 1993இல் குடிமதிப்புப் புள்ளி விபரத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட வேளாண்மைப் பயிர்கள் மற்றும் விலங்கு வளர்ப்பு மீதான அளவையின் அடிப்படையில் அமைந்தது.
(ஈ) இறப்பர் அபிவிருத்தித் திணைக்களத்தின் பயிர்ச் செய்கை உதவித் திட்டத்தின் கீழான நிலப்பரப்பு.
(உ) பயிரிடலும் பதனிடலும் மட்டும்.

கைவிடுவதற்கு இட்டுச் சென்றதுடன் வளமாக்கிப் பிரயோகத்தையும் ஊக்கமிழக்கச் செய்தது. இதன் மூலம் விளைச்சல் மட்டங்கள் மேலும் குறைவடைந்தன.

1998இல் சருவதேச இறப்பர்ச் சந்தைகளில் வீழ்ச்சியடையும் விலைப் போக்கு உள்நாட்டுச் சந்தையிலும் பிரதிபலித்தது. ஆர்எஸ்எஸ் இறப்பரின் கொழும்பு ஏல விலை மிகக் குறைந்த மட்டமொன்றுக்கு வீழ்ச்சியடைந்தது. கொழும்பு ஏலத்தில் ஆர்எஸ்எஸ் இறப்பரின் ஆண்டுச் சராசரி விலை 12 சதவீதத்தினால் கடுமையாக வீழ்ச்சியடைந்து ரூ.49.76 ஆகக் காணப்பட்ட வேளையில் ஏனைய ஆர்எஸ்எஸ் தரங்களின் விலைகள் 15 - 17 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. இறப்பரின் அனைத்துத் தரங்களினதும் சராசரி ஏற்றுமதி விலை (கஏபெ) 1997 உடன் ஒப்பிடுகையில் மேலும் 10 சதவீதத்தினால் ரூ.67.72இற்கு வீழ்ச்சியடைந்தது. இறப்பரின் சராசரி உற்பத்திச் செலவு (பாரிய பெருந்தோட்டங்களிலும் சிறு உடமையாளர் துறையிலும்) இறப்பர் அபிவிருத்தித் திணைக்களத்தினால் மதிப்பிடப்பட்டபடி 10 சதவீதத்தினால் கிலோக்கிறாம் ஒன்றுக்கு ரூ. 44.41இற்கு அதிகரித்துள்ளது. இது இறப்பர் சிறு உடைமையாளர்களின் இலாப எல்லைகளில் குறைப்பொன்றுக்கு இட்டுச் சென்றுள்ளது.

**வரைபடம் 3.2**
**விலை, உற்பத்திச் செலவுச் சுட்டெண்கள் - இறப்பர் (1990=100)**




சருவதேச சந்தையில் இயற்கை இறப்பர் விலைகளின் வீழ்ச்சிக்கு பல காரணிகள் உள்ளன. ஐக்கிய அமெரிக்க நாடுகளின் தாங்கிருப்புக்களின் பாரிய தொகுதியொன்று விடுவிக்கப்பட்டமை மற்றும் தாய்லாந்து, இந்தோனேசியா மற்றும் மலேசியா (இவை உலக இயற்கை இறப்பர் உற்பத்தியில் 72 சதவீதத்திற்கு வகை கூறுகின்றன) போன்ற முக்கிய இறப்பர் உற்பத்தி நாடுகளின் நாணயங்களில் 1997 இல் ஏற்பட்ட பாரிய பெறுமானத் தேய்வு என்பன விலைகளில் வீழ்ச்சியை ஏற்படுத்தின. 1998இன் ஆரம்பத்தில் தாய்லாந்து அரசாங்கத்தினால் இயற்கை இறப்பர் கையிருப்புக்கள் விடுவிக்கப்பட்டமை யானது விலை வீழ்ச்சியினை மேலும்

மோசமாக்கியது. இயற்கை இறப்பருக்கான மிக நெருங்கிய பதிலீடான செயற்கை இறப்பரின் விலையும் பெற்றோலிய உற்பத்திப் பொருட்களின் விலை வீழ்ச்சியின் காரணமாக கடுமையாக விழ்ச்சியடைந்ததோடு இயற்கை இறப்பரின் விலை வீழ்ச்சிக்குப் பங்களிப்புச் செய்தது. கிழக்காசியாவின் பொருளாதாரப் பின்னடைவானது இந்த நாடுகளில் வாகனங்களுக்கான கேள்வியில் பாரிய குறைப்பொன்றுக்கு இட்டுச் சென்றது. இயற்கை இறப்பருக்கான கேள்வியின் பாரிய பாகமொன்று வாகனங்களுக்கான கேள்வியில் இருந்து உருவாகும் வழிவந்த கேள்வியாகும். எனவே கிழக்காசிய நெருக்கடி பொதுவாக இறப்பருக்கான கேள்வியில் தாக்கத்தைக் கொண்டிருந்தது. தற்போதைய நலிவான கேள்வியானது குறுகிய காலத்தில் இறப்பர் விலைகளில் தொடர்ச்சியான மந்த நிலைமையொன்றை உருவாக்கலாம்.

இயற்கை இறப்பர் உற்பத்தியாளர்களையும் நுகர்வோரையும் பிரதிநிதித்துவப்படுத்தும் சருவதேச இயற்கை இறப்பர் அமைப்பு விலைகளை உறுதிப் படுத்துவதற்காக வேண்டி பொதுவாக சந்தையில் தலையிடுகின்றது. எனினும் அடிமட்ட விலைக்குக் கீழாக விலைகள் வீழ்ச்சியடைந்தமையின் காரணமாக தினசரிச் சந்தைச் சுட்டெண் விலையில் 1997/98 இல் அத்தகைய தலையீடு இடம்பெறவில்லை. அதனது நாணயங்களின் பெறுமானத் தேய்வின் காரணமாக தினசரிச்சந்தைச் சுட்டெண் விலையில் காணப்பட்ட திரிபுகளினால் உருவாகிய பிரச்சனைகளுக்குத் தீர்வு காண்பதற்கான முயற்சிகளில் ஈடுபட்டிருந்தது. உலகில் தற்போது செயற்பட்டிருக்கும் ஒரேயொரு மரபு வழி பண்ட உறுதிப்பாட்டு உடன்படிக்கையான இயற்கை இறப்பர் உடன்படிக்கைகளினால் தற்போதைய சூழ்நிலையில் எந்த வகையிலும் இறப்பர் விலையினை உறுதிப்படுத்த இயலாது காணப்பட்டது. தாய்லாந்து சருவதேச இயற்கை இறப்பர் அமைப்பிலிருந்து விலகுவதற்கு எதிர்பார்த்திருக்கின்ற வேளையில் 1999 ஒத்தோபர் 15ஆம் நாளிலிருந்து சருவதேச இயற்கை இறப்பர் அமைப்பிலிருந்து விலகுவதற்கான தனது நோக்கத்தினை மலேசியா அறிவித்தாமையானது சருவதேச இயற்கை இறப்பர் அமைப்பின் எதிர்காலத்தை நிச்சயமற்றதாக்கியுள்ளது.

ஆர்எஸ்எஸ் உற்பத்தி முக்கியமாக இடம்பெறும் சிறு உடைமையாளர்கள் துறையிலேயே வீழ்ச்சியுறும் விலைகளின் தாக்கம் முதலில் உணரப்பட்டது. வீழ்ச்சியுறும் இறப்பர் விலைகள் சில உற்பத்தியாளர்களை குறிப்பாக தட்டை இறப்பர் உற்பத்தியிலிருந்து விரிவுபடுத்திய லேட்டெக்ஸ் பதனிடலுக்கான திரவ லேட்டெக்ஸ் விற்பனைக்கும் கிரேப் இறப்பர் உற்பத்திக்கும் நகருவதற்கு இட்டுச் சென்றது. இதன் விளைவாக 1998 இல் இறப்பரின் உற்பத்தி 36.5 மில்லியன் கிலோக் கிராம்களுக்கு வீழ்ச்சியடைந்தது. இது 1997 இனைவிட 21 சதவீதம் குறைவானதாகும். மொத்த உற்பத்தியில் தட்டை இறப்பரின் பங்கு 1997இன் 44 சதவீதத்திலிருந்து 1998 இல் 35 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. கிரேப் இறப்பருக்கான சாதகமான விலைகளின் காரணமாக 1998இன் ஆரம்பத்தில் எதிர்க்கணிய விலைகள் ஓரளவுக்கு மெதுவடைந்தன. இலங்கையின் ஏற்றுமதியாளர்கள் கிரேப் இறப்பருக்கான உலக சந்தையில் நியாயமான பங்கொன்றினைக் கொண்டுள்ளனர். மேலும் கிரேப் இறப்பருக்கான சந்தை முன்னோக்கிய ஒப்பந்தங்களையே பெருமளவில் கொண்டுள்ளன. இக் காலப்பகுதியில் கிரேப் இறப்பரின் உற்பத்திப் பங்கு 39 சதவீதத்திலிருந்து 47 சதவீதத்திற்கு அதிகரித்தது.

மோசமடையும் விலைகளைக் கட்டுப்படுத்தும் நோக்கில் 1998 மேயில் கிலோக்கிறாம் ஒன்றுக்கு ரூ.5.40 ஆகக் காணப்பட்ட இறப்பர் ஏற்றுமதி மீதான தீர்வையை அரசாங்கம் அகற்றியதுடன் இது உற்பத்தியாளர் களினால் பெறப்பட்ட விலைகளில் சிறந்த தாக்கமொன்றினைக் கொண்டிருந்தது.

தயாரிப்புத்துறையில் இடைநிலை உள்ளீடு ஒன்றாக இறப்பர் பாவனை தொடர்ந்து அதிகரித்தது. 1998இல் இவ்வதிகரிப்பு 23 சதவீதமாக இருந்ததோடு 1997 இன் 44 மில்லியன் கிலோக்கிறாம்களிலிருந்து 1998 இல் 54 மில்லியன் கிலோக்கிறாம்களுக்கான அதிகரிப்பாகும். இதன்படி, இறப்பர் உற்பத்தியில் அரை வாசிக்கு மேற்பட்ட பகுதி (56 சதவீதம்) உள்நாட்டில் கைத்தொழில் துறையில் பயன்படுத்தப்பட்டது. 1998 வரவு செலவுத்திட்டத்தில் இறப்பர் உற்பத்தி தயாரிப்பு துறைக்கு வழங்கப்பட்ட சலுகையும் இறப்பருக்கான உள்நாட்டு கேள்வியை அதிகரிக்க உதவியது.

விலையில் ஏற்பட்ட குறைப்பும் நிதியங்களின் போதாமையும் 1998இல் புதிய பயிரிடலுக்கான பரப்பையும் மீள் பயிரிடலுக்கான பரப்பையும் முறையே 35 சதவீதத்தினாலும் 1 சதவீதத்தினாலும் 515 எக்டேயர் களுக்கும் 1,160 எக்டேயர்களுக்கும் வீழ்ச்சியடையச் செய்தது. மீள் பயிரிடலுக்கும் புதிய பயிரிடலுக்குமான நிதியங்கள் தீர்வைச் சேகரிப்பினால் உருவாக்கப் படுகின்றன. மீள் பயிரிடலுக்கான உதவு தொகைகள் முக்கிய பங்கொன்றினை வகித்துள்ளதோடு இறப்பர் மீள் பயிரிடலை ஊக்குவிப்பதில் இயையூக்கியாகவும் பணிபுரிந்துள்ளது. தமது இறப்பர் உற்பத்தியை நிறுவிக்கொள்வதற்காக பெரும்பாலும் அனைத்து இறப்பர் சிறு உடைமையாளர்களும் புதிய பயிரிடலுக்கான அல்லது மீள் பயிரிடலுக்கான உதவு தொகையினைப் பெற்றுக் கொண்டுள்ளனர். எனவே இந்த உதவு தொகைத்திட்டங்களைத் தொடருதல் அதிமுக்கியமானதாகும். எனவே தீர்வை முறை

இல்லாதபோதும் கூட இக் கைத்தொழிலின் நீண்டகாலம் நிலைத்துநிற்கும் தன்மையை உறுதிப்படுத்துவதற்காகவேண்டி மீளப்பயிரிடல் மற்றும் புதிய பயிரிடல் உதவுதொகைத் திட்டம் தொடரப்படல் வேண்டும். குறுகியகால பயிர்களான கொடித்தோடை மற்றும் அன்னாசி போன்றவற்றின் இடைப் பயிரிடலை இறப்பர் தோட்டங்களில் மேற்கொள்ளுவது இறப்பர் பயிர் வளரும் காலத்தில் இறப்பர் பயிரிடுவோரின் வருவாயினை அதிகரிக்கக் கூடியதாகவிருக்கும்.

தாழ்ந்த இறப்பர் விளைச்சல் இலங்கையில் இறப்பர் கைத்தொழிலினால் எதிர் நோக்கப்படும் பாரிய பிரச்சனை ஒன்றாகும். தற்போதைய விளைச்சல் மட்டங்கள் இந்தியா, மலேசியா, ஆகிய நாடுகளினால் பெறப்படும் மட்டங்களைவிட மிகவும் தாழ்ந்தவையாகும். மழைக்காப்பின் அதிக பயன்பாடு மற்றும் சிறந்த முகாமைத்துவம் என்பனவற்றின் காரணமாக இந்தியாவின் சராசரி விளைச்சல் இலங்கையின் விளைச்சலைவிட கிட்டத்தட்ட 50 சதவீதம் அதிகமானதாகும். குறைந்த விளைச்சல் மட்டங்கள் குறிப்பாக சிறு உடைமையாளர்களினால் வளமாக்கிப் பாவனை கைவிடப்பட்டமையோடு தொடர்புடையதாகக் காணப்படுகின்றது. கிரமமான வளமாக்கிப் பாவனையானது அண்மைக்கால விலை வீழ்ச்சியின் பின்னரும் சில சிறு உடைமையாளர்களின் இலாபத்தினைப் பேணுவதற்கு இயலச் செய்துள்ளமையை களுத்துறை மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களில் மத்திய வங்கியினால் அண்மையில் மேற் கொள்ளப்பட்ட மாதிரி அளவீடு ஒன்று வெளிப்படுத்தியுள்ளது.

அனுபவம் மிக்க பாலெடுப்போரின் பற்றாக்குறையையும் இந்த அளவீடு வெளிப்படுத்தியது. சார்பு ரீதியில் குறைந்த கூலிகள் மற்றும் இத்தொழில் மதிக்கப்படாமை என்பனவற்றின் காரணமாக இளைஞர்கள் இத்தொழிலில் ஈடுபடுவதற்கு பின்வாங்குகின்றமையினால் பாலெடுப்பதில் தற்பொழுது பெரும்பாலும் வயோதிபர்களே ஈடுபட்டிருப்பதும் அவதானிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக இளம் யுவதிகள் ஆடைத் தொழிற்சாலைகளில் தொழில்புரிவதையே விரும்புகின்றனர். ஏனெனில் பாலெடுப்பவர்களாகத் தொழில் புரிவதைவிட ஆடைத் தொழிற்சாலையில் தொழில் புரிவது உயர்வாகக் கருதப்படுகின்றது. எனினும் பாலெடுப்பவர்களுக்கான பற்றாக் குறையினை எதிர் கொள்வதற்காக இறப்பர் அபிவிருத்தி திணைக்களம் 1998 இல் 180 பாலெடுப்பவர்களுக்கு பயிற்சி அளித்துள்ளது. இது தொழிற் பயிற்சி அமைச்சின் தொழிற்பயிற்சித்துறையின் உதவியுடன் மேற் கொள்ளப்பட்டது.

## தெங்கு

1997 மட்டத்துடன் ஒப்பிடுகையில் 1998 இல் மொத்த தெங்கு உற்பத்தி சிறிதளவான வீழ்ச்சியொன்றைக்காட்டியது. தெங்கு முக்கோணத்தில் முன்னைய ஆண்டில் நிலவிய வரட்சியின் காலங்கடந்த தாக்கமே இதற்கான காரணம் எனக் குறிப்பிடப்படுகின்றது. 1998இல் தெங்கு உற்பத்தி 3 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. நலிவுற்ற சருவதேச சந்தை நிலைமைகளின் காரணமாக காய்களுக்குச் சமமான நியதிகளில் உலர்த்திய தேங்காய்த்துருவலின் உற்பத்தி 31 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. முன்னைய ஆண்டின் நேரிணையான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 1998 இன் முதலரைப்பகுதியில் உலர்த்திய தேங்காய்த்துருவல் ஏற்றுமதிகள் கணிசமான வீழ்ச்சியைக்காட்டின. 1998இல் தேங்காயெண்ணெய் உற்பத்திக்குச் சமமான காய்களின் எண்ணிக்கை 16 சதவீதத்தினால் 334 மில்லியன் காய்களுக்கு அதிகரித்தது. தெங்கு பெருமளவில் உள்நாட்டு நுகர்வு விடயமொன்றாகும். உள்நாட்டு நுகர்வானது 1998 இன் மொத்த உற்பத்தியின் 69 சதவீதத்திற்கு வகை கூறியது. வீட்டுப் பாவனைக்கு மேலதிகமாக இனிப்புப் பண்டங்கள் விசுக்கோத்துக்கள் என்பனவற்றுக்கான கைத்தொழில் மூலப் பொருளாகவும் தெங்கு பயன்படுத்தப்படுகின்றது. அண்மைய ஆண்டுகளில் தெங்குப் பாவனை விரைந்து அதிகரித்துள்ளது.

உடன் காய்களின் விலை ஆண்டு முழுவதிலும் பெரும்பாலும் உயர்வாகவே காணப்பட்டதுடன் பொதுவான வழங்கல் பற்றாக்குறையைப் பிரதிபலிப்பதாகவும் இருந்தது. வழங்கலில் காணப்பட்ட மேம்பாட்டுடன் விலைகள் படிப்படியாக வீழ்ச்சியடையத் தொடங்கியதுடன் உலர்த்திய தேங்காய்த்துருவல் மற்றும் தேங்காயெண்ணெய் உற்பத்திக் கைத்தொழில்களுக்கு காய்களைப் பெற்றுக் கொள்ளுவதில் காணப்பட்ட போட்டியையும் இலகுபடுத்தியது. எனினும் குறை உற்பத்திப் பருவகாலம் தொடங்கிய 1998 இன் நாலாம் காலாண்டில் விலை மட்டங்கள் மேலும் உயர்வடைந்ததோடு ஆண்டின் இறுதியில் 1997இன் 1000 காய்களுக்கான ரூ.6,495 இலிருந்து 1000 காய்களுக்கு ரூ.7,842 இற்கு அதி உயர் மட்டத்தினை எய்தியது.

உலர்த்திய தேங்காய்த்துருவலின் சராசரி ஏற்றுமதி விலை (கஏபெ) 2 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. பிரதான மூன்று தெங்கு உள்ளீட்டு உற்பத்திப் பொருட்களினதும் சராசரி ஏற்றுமதி விலை (கஏபெ) 1997 இன் காயொன்றுக்கான ரூ.9.63 இலிருந்து 1998 இல் காயொன்றுக்கு ரூ.9.73 இற்கு சிறிதளவால் அதிகரித்தது. எனினும் 1998இல் ஐ.அ.டொலர் நியதிகளில் ஏற்றுமதி விலை 9 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. உள்ளீட்டு உற்பத்திப் பொருட்களின் ஏற்றுமதிகளில் 25 சதவீத (ரூபா நியதிகளில்) கணிசமான வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. காயுற்பத்தியின் வீழ்ச்சியானது கிழக்காசிய நாணயங்களின்

### அட்டவணை 3.4
### தெங்குத்துறை மீதான புள்ளி விபரங்கள்

| விடயம் | அலகு | 1996 | 1997(அ) | 1998(ஆ) |
|---|---|---|---|---|
| 1. உற்பத்தி (இ) | மில்.காய்கள் | 2,546 | 2,631 | 2,547 |
| தேங்காய்த்துருவல் | மில்.காய்கள்(ஈ) | 425 | 524 | 362 |
| தேங்காய் எண்ணெய் | மில்.காய்கள்(ஈ) | 328 | 289 | 334 |
| உலர்த்திய தேங்காய் (உ) | மில்.காய்கள்(ஈ) | 39 | 42 | 52 |
| உடன்காய் ஏற்றுமதிகள் | மில்.காய்கள் | 17 | 18 | 18 |
| உள்நாட்டுதேங்காய்நுகர்வு(ஊ) | மில்.காய்கள் | 1,720 | 1,744 | 1,762 |
| 2. மொத்த நிலப்பரப்பு | '000 எக்டேயர் | 417 | 417 | 439 |
| 3. மீளப் பயிரிடல்/கீழ்ப் பயிரிடல்(எ) | எக்டேயர் | 578 | 1,221 | 595 |
| 4. புதிய பயிரிடல் (எ) | எக்டேயர் | 841 | 931 | 656 |
| 5. வளமாக்கிப் பாவனை | '000மெ.தொன் | 39 | 35 | 36 |
| 6. உற்பத்திச் செலவு | காய்க்கு ரூபா | 2.18 | 2.26 | 2.4 |
| 7. உடன்காயின் சில்லறை விலை | காய்க்கு ரூபா | 9.36 | 10.55 | 11.17 |
| 8. சராசரி ஏற்றுமதி விலை (க.ஏ.பெ.)(ஏ) | காய்க்கு ரூபா | 9.42 | 9.63 | 9.73 |
| 9. ஏற்றுமதி வருவாய் | ரூ.மில். | 6,091 | 6,939 | 6,110 |
| | ஐ.டொ.மில். | 110 | 118 | 94 |
| உள்ளீட்டு உற்பத்திகள் (எ) | ரூ.மில். | 4,469 | 4,864 | 3,632 |
| | ஐ.டொ.மில். | 81 | 82 | 56 |
| ஏனைய உற்பத்திகள் | ரூ.மில். | 1,622 | 2,075 | 2,478 |
| | ஐ.டொ.மில். | 29 | 35 | 38 |
| 10. மொ.உ.உ.இன் சதவீதமாகக் கூட்டப்பட்ட பெறுமதி (ஐ) | | 2.0 | 2.3 | 2.6 |

மூலங்கள்: தெங்குப் பயிர்ச்செய்கைச் சபை.
தெங்கு அபிவிருத்தி மேலாண்மைச் சபை.
தேசிய வளமாக்கிச் செயலகம்.
இலங்கை மத்திய வங்கி.

(அ) திருத்தப்பட்டது.
(ஆ) தற்காலிகமானவை.
(இ) மதிப்பீடு (உலர்த்திய தேங்காயின் இருப்புக்களில் ஏற்பட்ட மாற்றங்களுக்கு சீராக்கமு் செய்யப்படுவதன் காரணமாக பகுப்பாய்வின் கூட்டுத்தொகை மொத்தத்துடன் ஒத்திருக்க மாட்டாது.)
(ஈ) தெங்காய்க்குச் சமமான
1 மெற்.தொன் தேங்காய்த்துருவல் =8,000 காய்கள்.
1 மெற்.தொன் எண்ணெய் =8,800 காய்கள்.
1 மெற்.தொன் உலர்த்திய தேங்காய் =5,775 காய்கள்.

குறிப்பு -
1996/97 இல் தெங்கு அபிவிருத்தி அதிகார சபையினால் நடாத்தப்பட்ட ஆய்வின் அடிப்படையில் 1998 இல் மாற்றல் வீதங்கள் திருத்தப்பட்டது. 1996-97 மாற்றல் வீதங்கள் 1997 ஆண்டறிக்கையில் தரப்பட்டுள்ளன.
(உ) ஏற்றுமதிகள் மட்டும்.
(ஊ) தலைக்குரிய வீட்டு நுகர்வு ஆண்டுக்கு 94.8 காய்கள் என மதிப்பிடப்பட்டது. கைத்தொழிலுக்கு பயன்படுத்தப்பட்டவை தவிர.
(எ) தெங்குப் பயிர்ச்செய்கைச் சபையின் பயிர்ச்செய்கை உதவித் திட்டத்தின் கீழ் உள்ளடக்கப்பட்ட நிலப்பரப்பு.
(ஏ) மூன்று முக்கிய தெங்கு உள்ளீட்டு உற்பத்திகள் மட்டும்.
(ஐ) உற்பத்தி செய்தலும் பதனிடலும் மட்டும்.

மதிப்பிறக்கத்துடன் இணைந்து ஏற்றுமதிச் செயலாற்றத்தில் குறிப்பிடத்தக்க தாக்கத்தினை கொண்டிருந்தது. 1998இல் உலர்த்திய தேங்காய்த்துருவல் மற்றும் உலர்த்திய தேங்காய் போன்ற முக்கிய தெங்கு உற்பத்திப் பொருட்களின் ஏற்றுமதி விலை பிலிப்பைன்சு மற்றும் இந்தோனேசியா போன்ற முக்கிய தெங்கு உற்பத்தி நாடுகளின் நாணய மதிப்பிறக்கத்தைத் தொடர்ந்து தாழ்ந்த மட்டங்களில் காணப்பட்டது. உள்ளீடு அல்லா உற்பத்திப் பொருட்களின் ஏற்றமதி வருவாய்கள் 1997 இன் ரூ.2,075 மில்லியனிலிருந்து 1998இல் ரூ. 2,478 மில்லியனுக்கு 19 சதவீதத்தினால் அதிகரித்த போதும் அனைத்து தெங்கு உற்பத்திப் பொருட்களினதும் ஏற்றுமதி வருவாய்கள் 1997இன் ரூ.6,939 மில்லியனிலிருந்து 1998இல் ரூ.6,110 மில்லியனுக்கு 12 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது.

முக்கிய உற்பத்தி நாடுகளின் வழங்கல் பற்றாக்குறை பாம் எண்ணெய் மற்றும் பாம் உள்ளீட்டு எண்ணெய் போன்ற பதிலீட்டுப் பொருட்களின் வழங்கலில் வீழ்ச்சி என்பனவற்றின் காரணமாக தேங்காய் எண்ணெயின் சருவதேச விலை ஆண்டு முழுவதும் உறுதியாக இருந்தது. பிலிப்பைன்சு மற்றும் இந்தோனேசியா போன்ற முக்கிய எண்ணெய் உற்பத்தி செய்யும் நாடுகளில் 1997 இன் இரண்டாம் அரைப்பகுதியில் நிலவிய எல்நினோ கால நிலையின் தாக்கத்தின் காரணமாக தேங்காய் எண்ணெயின் உற்பத்திக்கான உலர்த்திய தேங்காயினைப் பெற்றுக்கொள்வதில் இடர்களை அனுபவித்தன. உற்பத்தியில் வீழ்ச்சியொன்றினை எதிர்பார்த்து 1998 இல் தேங்காய் எண்ணெயின் சருவதேச விலைகள் உயர்வடைந்தன. உள்நாட்டுச் சந்தையிலும் பெரும பாலும் இதே விலைப்போக்கு பிரதிபலிக்கப்பட்டது. எனினும் குறை உற்பத்திப் பருவகாலம் தொடங்கியதுடன் உள்நாட்டுச் சந்தையில் தேங்காய்க்கு கடுமையான பற்றாக்குறையொன்று காணப்பட்டது. இது நிலைமையை மோசமாக்கியதோடு உலர்த்திய தேங்காய் மற்றும் தேங்காய் எண்ணெயின் விலை 1998இன் இறுதியில் கடுமையாக அதிகரித்தது.

**வரைபடம் 3.3**
**விலை, உற்பத்திச் செலவுச் சுட்டெண்கள் – தெங்கு (1990=100)**




தெங்கின் கீழான மொத்தப் பரப்பு 439,000 எக்டேயர்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது. 1998இல் காய்தரும் மரங்களின் பரப்பு 1997இல் காணப்பட்ட அதே அளவில் கிட்டத்தட்ட 363,000 எக்டேயர்களாக விளங்கியது. தெங்குப் பயிர் செய்கைச்சபை விரிவாக்கப் பணிகளின் ஊடாக அதனது உற்பத்தி மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டத்தை தொடர்ந்து மேற்கொண்டது. இதே வேளையில் பொது நிருவாக உள்நாட்டலுவல்கள் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சின் உதவியுடன் தெங்குக் காணிகளின் துண்டாக்கலை ஒழுங்கு முறைப் படுத்துதற்கான சட்டத்தினை அறிமுகப்படுத்துவதற்கு தெங்குப் பயிர்ச்செய்கைச் சபை நடவடிக்கைகளை மேற்கொண்டது. சட்டத்துக்கான வரைவு ஒப்பு்தலுக்கான

சட்ட வரைஞரின் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இலங்கை மகாவலி அதிகாரசபை மற்றும் உலர்த்திய தேங்காய்த்துருவல் ஆலையாளர் சங்கம் ஆகியன 1998இல் வரையறுக்கப்பட்ட மகாவலி தெங்குப் பெருந்தோட்டம் என்ற கூட்டு முயற்சிக் கம்பனி ஒன்றினை உருவாக்கின. முக்கிய தெங்குப் பயிர்ச் செய்கைப் பிரதேசங்களில் தெங்குக் காணிகள் துண்டாக்கப்படுவதால் உருவாகும் உற்பத்தி இழப்பை எதிரீடு செய்வதற்காக மகாவலிப் பிரதேசத்தில் தெங்குப் பயிர்ச் செய்கையை மேற் கொள்ளுவதற்கு இந்தக் கம்பனி எதிர்பார்க்கின்றது. வெளிநாட்டு சிறப்பறிவாளர்களின் உதவியுடன் உயர் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி (சொட்டு நீர்ப்பாசனம் போன்ற)தெங்குப் பயிர்ச் செய்கைகை மேற் கொள்ளுவதற்கு இக் கம்பனியினால் மகாவலி "பி" வலயம் இனங் காணப்பட்டுள்ளது. இந்தச் செயற்றிட்டத்துக்கான செலவு ரூ. 279 மில்லியன் என மதிப்பிடப்பட்டுள்ளது. இந்தச் செயற்றிட்டத்தின் மூன்று கட்டங்களும் முற்றுப் பெறும்போது கிட்டத்தட்ட 1500 எக்டேயர்கள் தெங்கின் கீழ் கொண்டுவரப்படும் இப்புதிய தெங்குக் காணிகளில் இடைப் பயிர்ச்செய்கையை (வாழை, சோளம், போன்றவை) மேம்படுத்தவும் கம்பனி திட்ட மிட்டுள்ளது.

1998இல் உலர்த்திய தேங்காய்த்துருவல் தவிர்ந்த ஏனைய தெங்குப் பொருட்களின் தீர்வை வீதங்கள் மாற்றமின்றிக் காணப்பட்டன. 1998 மாச்சு 1ஆம் நாளிலிருந்து ஏற்படும் வகையில் 2001 ஆம் ஆண்டு மாச்சு 1 வரையிலான மூன்றாண்டுக் காலப்பகுதியில் உலர்த்திய தேங்காய்த்துருவல் ஏற்றுமதிகள் மீதான தீர்வை கிலோக்கிறாம் ஒன்றுக்கு ரூ.1 இலிருந்து கிலோக்கிராம் ஒன்றுக்கு ரூ..2 இற்கு அதிகரிக்கப்பட்டது. உலர்த்திய தேங்காய்த் துருவல் மீதான தீர்வையின் மேல் நோக்கிய அதிகரிப்பானது கூட்டு முயற்சிக் கம்பனிக்கு ஆதரவு வழங்குவதற்கு போதுமான நிதியங்களைத் திரட்டுவதற்கானதாகும். 1998 இல் மொத்தத் தீர்வைச் சேரிப்பு ரூ.147 மில்லியனாக விளங்கி முன்னைய ஆண்டைவிட 34 சதவீத அதிகரிப்பைக் கொண்டிருந்தது. இவ்வாண்டில் தெங்குக் காணிகளை அபிவிருத்தி செய்வதற்காக புதிய பயிரிடல் (ரூ.13.5 மில்லியன்) மீள் பயிரிடல் (10 மில்லியன்) வீட்டுத் தோட்டம் (ரூ. 15 மில்லியன்) "கப்ருக ஆயோஜன" கடன் திட்டம் (ரூ.8 மில்லியன்) ஆகிய நிகழ்ச்சித் திட்டங்களுக்கு தெங்குப் பயிர்ச்செய்கைச் சபை இந்தத் தீர்வை நிதியங்கள் சிலவற்றைப் பயன்படுத்தியது.

மொத்த தெங்கு உற்பத்தியின் 70 சதவீதத்திற்கு மேலான அதிஉயர் உள்நாட்டு நுகர்வானது தெங்கு உற்பத்திப் பொருட்களுக்கான ஏற்றுமதிச் சந்தையினைப் பயன்படுத்துவதை பெருமளவில் கட்டுப்படுத்தியுள்ளது. இதற்கு மேலதிகமாக உடன்காய்களின் உள்நாட்டு நுகர்வில் பயன்படுத்தப்படும் முறைகள் கணிசமான விரயத்தைக் குறைக்கும். விரயத்தினை குறைப்பதற்காக தேங்காய்ப்பால் தூள் மற்றும் தேங்காய்ப்பாலாடை போன்ற தெங்கு உள்ளீட்டை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திப் பொருட்கள் ஊக்குவிக்கப்பட வேண்டியதோடு நுகர்வோரினால் செலுத்தப்படக்கூடிய நியாயமான விலையில் உடனடியாக கிடைப்பதற்கான வழிவகைகளும் மேற் கொள்ளப்படல் வேண்டும். எனவே அத்தகைய உற்பத்திப் பொருட்களின் தயாரிப்பாளர்களுக்கு ஊக்குவிப்புக்கள் வழங்கப்பட வேண்டிய வேளையில் இத்தகைய பொருட்களின் உள்நாட்டு பாவனையினைப் பிரபல்யப்படுத்துவதற்கான சந்தை மேம்படுத்தல்களும் அவசியமாகின்றன. இது தவிர தேங்காய் சிரட்டை, செயற்படு கரியம் போன்ற தெங்கு உள்ளீட்டுப் பொருட்கள் அல்லா உற்பத்திப் பொருட்களின் முக்கிய ஏற்றுமதியாளராகிய இலங்கை தேங்காய்ச் சிரட்டையினைப் பயன்படுத்தக் கூடிய ஏனைய முறைகளையும் மேலும் கண்டறிய வேண்டும். (நார் துணைப் பொருட்களுக்கான மூலகம்) நுளம்புச் சுருள்களுக்கான அடிப்படைப் பொருட்கள் போன்ற கைத்தொழில்களுக்கான மூலப் பொருளாக அதிகளவு வாய்ப்புக்களைக் கொண்டுள்ளமையை ஆய்வுகள் வெளிப்படுத்தியுள்ளன.

### ஏனைய ஏற்றுமதிப் பயிர்கள்

கராம்பு, ஏலம், கறுவா, மிளகு மற்றும் சாதிக்காய் போன்ற நறுமணச் சுவைச் சரக்குப் பொருட்கள் கொக்கோ கோப்பி போன்ற குடிபான வகைப் பொருட்கள் மற்றும் கறுவா சிற்றனெல்லா போன்ற அத்தியாவசிய எண்ணெய் வகைகள் ஆகியவற்றை ஏனைய ஏற்றுமதிப் பயிர்த்துறை உள்ளடக்கியுள்ளது. ஏற்றுமதி வருவாய்கள் 21 சதவீதத்தினால் ஐ.அ.டொலர் 120 மில்லியனிற்கு அதிகரித்து, 1998 இல் இத்துறை கணிசமான மேம்பாட்டைக் காட்டியது. மிளகு, கொக்கோ, கோப்பி, ஏலம் மற்றும் கறுவா இலை எண்ணெய் என்பனவற்றின் உற்பத்தியில் கணிசமான அதிகரிப்புக் காணப்பட்டது.

கடந்த சில ஆண்டுகளில் உறுதியான மேம்பாட்டினைக் காட்டிய மிளகு உற்பத்தி 1998இல் 73 சதவீதத்தினால் அதிகரித்தது. கவர்ச்சிகரமான விலைகளினால் உந்தப்பட்ட சிறந்த முகாமைத்துவம் புதிய பிரதேசங்களில் உற்பத்தி பெறப்பட்டமை என்பனவே இதற்கான காரணமாக குறிப்பிடுகின்றது. அதிகரித்த கேள்வியின் மத்தியில் உலக வழங்கலில் தொடர்ந்தும் பற்றாக்குறை காணப்பட்டமையின் காரணமாக தொடர்ச்சியாக ஐந்தாவது ஆண்டிலும் மிளகுக்கான சருவதேச விலை அதிகரித்தது. சாதகமற்ற வானிலை நிலைமைகளின் காரணமாக பிரேசில்,

வியட்நாம், தாய்லாந்து, ஆகிய நாடுகளின் மிளகு உற்பத்தியில் ஏற்பட்ட குறைப்பொன்றும் வழங்கல் பற்றாக்குறைக்கு ஏதுவாகியது. மிளகுக்கான சராசரி ஏற்றுமதி விலை 31 சதவீதத்தினால் கிலோக்கிராம் ஒன்றுக்கு ரூ.335 இற்கு அதிகரித்தது. சராசரி ஏலவிலையும் பண்ணை அடிமட்ட விலைகளும் முறையே 28 சதவீதத்தினாலும் 32 சதவீதத்தினாலும் கிலோக்கிறாம் ஒன்றுக்கு ரூ.287 இற்கும் கிலோக்கிராம் ஒன்றுக்கு ரூ.262 இற்கும் அதிகரித்தன.

எல் – நினோ காலநிலை நிலைமைகளின் காரணமாக உலகின் மிகப்பெரிய சாதிக்காய் உற்பத்தியாளரான இந்தோனேசியாவின் உற்பத்தி வீழ்ச்சியடைந்தமையின் காரணமாக சாதிக்காயின் வழங்கல் பாதிக்கப்பட்டது. இதன் விளைவாக சாதிக்காய் மற்றும் சாதிப்பத்திரி ஆகியவற்றின் உள்நாட்டு சராசரி பண்ணை அடிமட்ட விலை 1998இல் பெரும்பாலும் 80 சதவீதத்தினால் அதிகரித்தது. ஏனைய அனைத்து ஏற்றுமதி வேளாண்மைப் பயிர்களினதும் சருவதேச விலைகளும் உற்பத்தியாளர் விலைகளும் 1998 இல் மேம்பாட்டினைக் காட்டியுள்ளன.

**அட்டவணை 3.5**
ஏனைய ஏற்றுமதிப் பயிர்களின் உற்பத்தி

மெற்றிக் தொன்கள்

| பயிர் | 1996 | 1997(அ) | 1998(ஆ) |
|---|---|---|---|
| கோப்பி | 2,158 | 2,165 | 2,343 |
| கொக்கோ | 1,628 | 1,709 | 1,904 |
| கறுவாச்சுருள் | 10,891 | 11,453 | 11,206 |
| கறுவா இலை எண்ணெய் | 110 | 100 | 150 |
| மிளகு | 3,988 | 3,912 | 6,776 |
| கராம்பு | 1,437 | 2,333 | 2,022 |
| ஏலம் | 75 | 75 | 90 |
| சாதிக்காயும் சாதிப்பத்திரியும் | 1,198 | 1,108 | 1,382 |
| சிற்றெனெல்லா (புல்லெண்ணெய்) | 190 | 210 | 190 |

மூலம்: வேளாண்மை ஏற்றுமதித் திணைக்களம்.

(அ) திருத்தியமைக்கப்பட்டவை.
(ஆ) தற்காலிகமானவை.

1998இல் இந்தப் பயிர்களின் கீழான நிலப்பரப்பு 1 சதவீதத்தினால் 77,782 எக்டேயர்களுக்கு மேம்பாடடைந்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாண்டில் கிட்டத்தட்ட 800 எக்டேயர்களில் இப்பயிர்களின் புதிய பயிரிடல் மேற் கொள்ளப்பட்டது. தொடர்ச்சியாக மூன்றாவது ஆண்டிலும் புதிய பயிரிடலின் பாரிய பங்கொன்று (82 சதவீதம்) மிளகின் கீழேயே காணப்பட்டது. 1997 இன் ரூ.27 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 1998இல் ஏற்றுமதி வேளாண்மைப் பயிர் உதவித்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட ஆதரவு ரூ.32 மில்லியனாக விளங்கியது. முன்னைய ஆண்டுகளைப் போலவே உதவிகளின் பாரிய பங்கொன்று (70 சதவீதம்) மிளகுக்கும் கறுவாவுக்குமானதாக இருந்தது.

சிறப்பு ஒதுக்கீடுகளின் வடிவில் ரூ.150 மில்லியனும் பொதுவான ஒதுக்கீடான ரூ.54 மில்லியனுமாக 1998இல் இந்தத்துறையின் அபிவிருத்திக்கான வரவு செலவுத்திட்ட ஒதுக்கீடுகள் ரூ.204 மில்லியனாக விளங்கின. இந்த சிறப்பு ஒதுக்கீடானது கண்டி, மாத்தளை, கேகாலை. பதுளை ஆகிய நான்கு மாவட்டங்களில் ஏற்றுமதி வேளாண்மைப் பயிர்களை அபிவிருத்தி செய்வதற்காக குறித்தொதுக்கப்பட்டுள்ளது. இதன்படி இந்தப்பயிர்களை அபிவிருத்தி செய்வதற்காக பல புதிய நிகழ்ச்சித் திட்டங்கள் தொடக்கி வைக்கப்பட்டுள்ளன. மிளகு, கோப்பி, கொக்கோ, ஏலம், சிற்றெனல்லா மற்றும் கறுவா ஆகியவற்றின் மீள் பயிரிடல் மற்றும் புதிய பயிரிடல் என்பனவற்றுக்கு ஏற்கனவேயுள்ள உதவிக் கொடுப்பனவு வீதங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளன. தரத்தினை மேம்படுத்துவதற்கும் அறுவடைக்குப் பின்னான இழப்புக்களைக் குறைப்பதற்கும் ஏற்றுமதி வேளாண்மைத் திணைக்களத்தின் கீழ் அறுவடைக்குப் பின்னான ஆலோசனைப் பணிகள் பிரிவு என்ற சிறப்புப் பிரிவு ஒன்று நிறுவப்பட்டுள்ளது. இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ஏற்றுமதி வேளாண்மைப்பயிர்களை மேம்படுத்துவதற்காக புதிய பொறிகள், பதனிடும் கருவிகள் மற்றும் தொழில்நுட்ப உதவி என்பன வழங்கப்பட்டுள்ளன. பெருந் தோட்டத்துறையில் இந்தப் பயிர்களை பிரபல்யப்படுத்தும் நோக்கில் விரிவாக்கப் பணிகள், தொழில்நுட்ப அறிவு மற்றும் பெருந்தோட்ட வேளாண்மையில் பயிர்களின் பன்முகப்படுத்தல் என்பனவற்றை வழங்குவதற்காக பெருந்தோட்ட ஆலோசனைப்பிரிவு ஒன்று நிறுவப்பட்டுள்ளது.

1997இல் பல்லாண்டுப் பயிர் அபிவிருத்தி செயற்றிட்டம் வெற்றிகரமாக முற்றுப் பெற்றதன் பின்னர் பல்லாண்டுப் பயிர் அபிவிருத்தி செயற்றிட்டத்தின் இரண்டாவது கட்டம் தொடர்பான இன்னுமொரு கடனுக்காக அரசாங்கம் ஆசிய அபிவிருத்தி வங்கியுடன் கலந்துரையாடலை மேற்கொண்டது. இச் செயற்றிட்டத்தின் குறிக்கோள் யாதெனில் வர்த்தக ரீதியில் நன்மை தரக்கூடியதாக பல்லாண்டுப் பயிர் துறையொன்றினை நிறுவுவதாகும்.

இரண்டாவது பல்லாண்டு பயிர் அபிவிருத்திச் செயற்றிட்டம் 1998 செத்தெம்பரில் தொழிற்படத் தொடங்கியது. இலகுகடன் ஒன்றின் வடிவில் ஆசிய அபிவிருத்தி வங்கி, ஐ.அ.டொலர் 20 மில்லியனை வழங்கிய வேளையில் பங்கேற்கும் கடன் முகவர்கள் கிட்டத்தட்ட ஐ.அ.டொலர் 15 மில்லியன் குறைநிரப்பு நிதியத்தினை வழங்குவர் என எதிர்பார்க்கப்படுகின்றது. செயற்றிட்டக் காலம் ஆறு ஆண்டுகளாகும். முதலாவது பல்லாண்டுப்பயிர் செயற்றிட்டத்தின் கீழான 8 மாவட்டங்களுடன் ஒப்பிடுகையில் செயற்றிட்டத்தின்

இரண்டாவது கட்டம் 17 மாவட்டங்களை உள்ளடக்குவதற்காக விரிவாக்கப்படும். இச் செயற்றிட்டத்தின் நான்கு மாத தொழிற்பாட்டுக் காலத்தில் ரூ.84 மில்லியனுக்கு 107 கடன் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டுள்ளதோடு ரூ.10 மில்லியன் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

## 3.4 உள்நாட்டு வேளாண்மை

### நெல்

நெல் உற்பத்தி 1997ஆம் ஆண்டு உயர்ந்தளவான 9 சதவீதமானதொரு அதிகரிப்பின் பின்னர் 1998ஆம் ஆண்டில் 20 சதவீதமாக உயர்வடைந்தது. இவ்வெளியீடு 2.7 மில்லியன் மெற்றிக் தொன்கள் என்றதொரு மட்டத்தை அடைந்தது. (129 மில்லியன் புசல்கள்) 1995இல் பதிவு செய்யப்பட்ட உச்ச அளவான உற்பத்தியை விடவும் 4 சதவீதம் குறைவாகவும் இதற்கு முன்னர் பதிவு செய்யப்பட்ட இரண்டாவது ஆகக் கூடிய உற்பத்தி மட்டமாகக் காணப்படுகிறது. பெரும்போகம் மற்றும் சிறுபோகம் ஆகிய இரு காலப்பகுதியிலும் உற்பத்தியில் அதிகரிப்பு ஏற்பட்டிருக்கிறது. நெல் உற்பத்தி செய்யப்பட்ட பரப்பளவு 16 சதவீதத்தினால் அதிகரித்தமையும், 1998 சிறுபோகத்தில் சராசரி விளைச்சலில் ஏற்பட்ட குறிப்பிட்டதொரு அதிகரிப்பு என்பனவும் வெளியீட்டின் முன்னேற்றத்திற்குப் பங்களிப்புச் செய்தன.

1997/98 பெரும்போகத்தில் நெல் வெளியீடானது 22 சதவீதத்தினால் 1.78 மில்லியன் மெற்றிக் தொன்களுக்கு (85 மில்லியன் புசல்கள்) அதிகரித்ததுடன் இது 1982/83 பெரும்போக காலத்தில் பதிவு செய்யப்பட்ட உச்ச அளவான உற்பத்தி மட்டத்திற்குப் பெரும்பாலும் சம அளவாக இருந்தது. விசேடமாக அநுராதபுரம், மட்டக்களப்பு, மற்றும் குருநாகல் போன்ற உயர்வலய மாவட்டங்களில் வட கிழக்கு பருவக்காற்று மழைவீழ்ச்சி இயல்பாக இருந்ததால் அறுவடை செய்யப்பட்ட நிலப்பரப்பு அதிகரித்தமையே பெரும்போக வெளியீட்டின் முன்னேற்றத்திற்கு காரணமாயிருந்தது. இம் மூன்று மாவட்டங்களும் சேர்ந்து உற்பத்தியின் 90 சதவீதத்திற்கு மேற்பட்ட அதிகரிப்புக்குக் காரணமாயிருந்தது. அநுராதபுர மாவட்டத்தில் 230,000 மெற்றிக் தொன்களாக நான்கு மடங்கிற்கும் மேலானதொரு அதிகரிப்பைக் காட்டியமை உற்பத்தி அதிகரிப்பில் குறிப்பிடத்தக்கதொரு அம்சமாகும். முக்கியமாக நெல் உற்பத்தி செய்யும் அநுராதபுரம், அம்பாறை, குருநாகல் மற்றும் பொலநறுவை மாவட்டங்கள் 48 சதவீத மொத்தப் பெரும்போக வெளியீட்டிற்கு வகை கூறியது. 1997 இல் சிறுபோக நெல் வெளியீடு பகுதியளவானதொரு மீட்சியைக் காட்டியபின் 1998இல் 16 சதவீதத்தினால் 911,000 மெற்றிக் தொன்களுக்கு (44 மில்லியன் புசல்கள்) அதிகரித்தது. 1998 சிறுபோக காலத்தில் தாழ் பிரதேச உலர்வலய மாவட்டங்களில் கணிசமானளவு உற்பத்தி அதிகரிப்பிற்கு மாறாக ஈரவலய பிரதேசங்களில் நெல் உற்பத்தி வீழ்ச்சியடைந்து காணப்பட்டது.

1998இல் ஆண்டுக்கான சராசரி நெல் விளைச்சல் மேலும் எக்டேயருக்கு 3,636 கிலோக்கிராமாக 1 சதவீதத்தினால் அதிகரித்தது. பெரும்போக விளைச்சல் வீழ்ச்சி ஒன்றைச் சுட்டிக் காட்டிய போதிலும் சிறுபோக விளைச்சலில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க முன்னேற்றங்கள் காரணமாகவே இம் முன்னேற்றம் முழுமையாகப் பதிவு செய்யப்பட்டது. 1998 பெரும்போக காலத்தில் சிறந்த மழைவீழ்ச்சி கிடைத்ததால் பிரதானமாக எல்லை

**அட்டவணை 3.6**
**நெல்துறை மீதான புள்ளி விபரங்கள்**

| விடயம் | அலகு | 1997(அ) பெரும் போகம் | 1997(அ) சிறு போகம் | 1997(அ) மொத்தம் | 1998(ஆ) பெரும் போகம் | 1998(ஆ) சிறு போகம் | 1998(ஆ) மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| விதைக்கப்பட்ட மொத்த நிலப்பரப்பு | '000 எக்டேயர்கள் | 473 | 257 | 730 | 574 | 274 | 848 |
| அறுவடை செய்யப்பட்ட மொத்த நிலப்பரப்பு | '000 எக்டேயர்கள் | 443 | 247 | 690 | 563 | 266 | 829 |
| அறுவடை செய்யப்பட்ட தேறிய பரப்பு | '000 எக்டேயர்கள் | 397 | 222 | 619 | 501 | 239 | 740 |
| உற்பத்தி | '000 மெற்றிக்தொன் | 1,457 | 782 | 2,239 | 1,781 | 910 | 2,692 |
| | '000 புசல்கள் | 69,835 | 37,496 | 107,331 | 85,345 | 43,607 | 128,952 |
| விளைச்சல் (இ) | கி.கி. எக்டேயர்கள் | 3,670 | 3,529 | 3,603 | 3,555 | 3,802 | 3,634 |
| வழங்கப்பட்ட கொடுகடன் | ரூ. மில்லியன் | 275 | 108 | 383 | 178 | 99 | 277 |
| உத்தரவாத விலைத் திட்டத்தின்கீழ் கொள்வனவு செய்யப்பட்டவை | '000 மெ.தொன்கள் | - | - | - | - | - | - |
| அரிசி இறக்குமதிகள் | '000 மெ.தொன்கள் | - | - | 306 | - | - | 168 |
| (நெல்லிற்குச் சமன்) | ('000 மெ.தொன்கள்) | | | 438 | - | - | 240 |

(அ) திருத்தியமைக்கப்பட்டது.
(ஆ) தற்காலிகமானவை.
(இ) பெரும்போக, சிறுபோகத்திற்கான எக்டேயர் ஒன்றின் விளைவு பயிர் அறுவடை அளவீடுகளின் அடிப்படையில் அமைந்த குடிமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களத்திலிருந்து பெற்ற தரவுகளைக் கொண்டு கணக்கிடப்படுகின்றது. அதேவேளையில் மொத்த உற்பத்தியை அறுவடை செய்யப்பட்ட தேறிய நிலப்பரப்பால் பிரிப்பதன் மூலம் சராசரி விளைவு கணக்கிடப்படுகின்றது.

மூலங்கள்: குடிமதிப்புப் புள்ளி விபரத் திணைக்களம்.
வேளாண்மைத் திணைக்களம்.
வேளாண்மை, காணிகள், அமைச்சு.
நெல் சந்தைப்படுத்தும் சபை.
இலங்கைச் சுங்கம்.
இலங்கை மத்திய வங்கி.

நிலங்களின் பரப்பளவு அதிகரிக்கப்பட்டு நெற் செய்கைக்கான நிலப்பரப்பின் கீழ் கொண்டு வரப்பட்டதன் விளைவாக 1997/98 பெரும்போக காலத்தில் சராசரி விளைச்சல் ஒரு எக்டேயருக்கு 3,555 கிலோக்கிராம்கள் (ஏக்கர் ஒன்றுக்கு 69 புசல்கள்) என்ற அடிப்படையில் 3 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. மாறாக, 1998 சிறுபோக காலத்தில் சராசரி விளைச்சல் எந்தவொரு சிறுபோக காலத்திலும் இல்லாதவகையில் ஒரு எக்டேயருக்கு 3,806 கிலோக்கிறாம்கள் (ஒரு ஏக்கருக்கு 75 புசல்கள்) என்ற அடிப்படையில் 8 சதவீதத்தினால் மிகவும் குறிப்பிடத்தக்க முன்னேற்றமடைந்தது. மூன்று வகையான நீர்ப்பாசன முறைகளின் கீழும் பெரும்போக காலத்தில் சராசரி விளைச்சல் குறிப்பிடத்தக்களவில் முன்னேற்றமடைந்தது. கடந்த சிறு போக காலத்துடன் ஒப்பிடுகையில் மழை நீரை நம்பிய பிரதேசங்களில் விளைச்சல்கள் 10 சதவீதமானதொரு முன்னேற்றத்தைக் காட்டியது. 1997 இல் காணப்பட்ட 5 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் சாதகமான மழைவீழ்ச்சி காரணமாக இவ்வாண்டு பயிர்ச்சேதம் 2 சதவீதமாகக் குறைவடைந்துள்ளது. சிறுபோக காலத்தில் ஆகக் கூடிய சராசரி விளைச்சலாக ஒரு எக்டேயருக்கு 4,787 கிலோக்கிறாம்களைப் பதிவு செய்தது. தொடர்ச்சியான இரு பெரும்போகங்களிலும், கடந்த பெரும்போகத்தை விடவும் 7 சதவீத அதிகரிப்புடன் ஆகக்கூடிய சராசரி விளைச்சலை மாகாவலி "எச்" பிரதேசம் பதிவு செய்தது.



வரைபடம் 3.4
நெல் உற்பத்தி

பயிர் இழப்புக்கெதிராக பயிர்ச் செய்கையாண்டில் வேளாண்மைக் காப்புறுதிச் சபையினால் காப்புறுதி செய்யப்பட்ட நெற் செய்கை நிலத்தின் மொத்தப் பரப்பளவு 14,000 எக்டேயர்களாக இருந்ததுடன், சேகரிக்கப்பட்ட காப்புறுதிக் கட்டணத் தொகை ரூ.9.25 மில்லியன்களாக இருந்தது. ஆண்டுக்காலத்தில் செலுத்தப்பட்ட நட்டஈட்டுத்தொகை ரூ. 1.5 மில்லியன்களாகும். 1973ஆம் ஆண்டு 27ஆம் இலக்க வேளாண்மைக் காப்புறுதிச் சபைச் சட்டத்துக்கமைய சகல நெற்செய்கை நிலங்களும் கட்டாயமாக பயிர் இழப்புக்கெதிராக காப்புறுதி செய்யப்படல் வேண்டும். எனினும் விதைக்கப்பட்ட மொத்த நிலப்பரப்பை விடவும் 2 சதவீதத்திற்கும் குறைவான நிலப்பரப்பே காப்புறுதி செய்யப்பட்டது. இத் திட்டத்தின் குறைந்தளவான பங்கேற்றலுக்கு சட்டத்தை செயற்படுத்துவதிலுள்ள நடைமுறைச் சிக்கல் மற்றும் குறைந்த இடருள்ள பிரதேசங்களிலுள்ள வேளாண்மையாளர்கள் இத் திட்டத்தில் சேர்ந்துகொள்ள விரும்பாமை போன்றவற்றை வேளாண்மைக் காப்புறுதிச்சபை காரணம் காட்டுகிறது.

பெரும்போக மற்றும் சிறுபோக காலப்பகுதியில் நெற் செய்கைத்துறைக்கான வளமாக்கி வழங்கல்கள் 4 சதவீதத்தினால் அதிகரித்தது. கடந்த வருட பயிர்ச் செய்கைக் காலத்தில் வழங்கப்பட்ட 242,000 மெற்றிக் தொன்கள் வளமாக்கிகளுடன் ஒப்பிடும்போது இவ்வருடம் வழங்கப்பட்ட மொத்த வளமாக்கிகளின் அளவு 251,000 மெற்றிக் தொன்களாக இருந்தது. வளமாக்கி வழங்கல்கள் பெரும்போக காலத்தில் 5 சதவீதத்தினால் 162,000 மெற்றிக் தொன்களுக்கு அதிகரித்ததுடன் சிறுபோக காலத்தில் 2 சதவீதத்தினால் 89,500 மெற்றிக் தொன்களுக்கு அதிகரித்தது.

புதிய அனைத்தையும் உள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டத்தின் கீழ், 1997/98 பெரும்போக காலத்தில் நெற் செய்கைத்துறைக்கு வழங்கப்பட்ட கடன்கள் ரூ.178 மில்லியன்களாக இருந்தது. இத்தொகையானது கடந்த ஆண்டு இதே காலப்பகுதியில் வழங்கப்பட்ட கடன் தொகையைவிட 35 சதவீதம் குறைவானதாகும். வழங்கப்பட்ட கடன்கள் 1997 சிறுபோக காலத்தில் ரூ.108 மில்லியன்களாக இருந்து 1998 சிறு போக காலத்தில் ரூ.99 மில்லியன்களாக வீழ்ச்சியடைந்தது.

கடந்த ஆண்டுடன் ஒப்பிடும்போது வெளியீடு அதிகரித்ததன் காரணமாக நெல்லுக்கான சராசரி உற்பத்தி விலை 7 சதவீதத்தினால் புசல் ஒன்றுக்கு ரூ.215 (கிலோ ஒன்று ரூ.10.32) ஆக வீழ்ச்சியடைந்தது. எனினும் உற்பத்தி விலையானது தொடர்ந்தும் 1993 இலிருந்து மாற்றியமைக்கப்படாத உத்தரவாத விலையான புசலொன்றிற்கு ரூ.155 (கிலோ ஒன்று ரூ.7.42) விலையை மேவியதாகக் காணப்பட்டது. 1996ஆம் ஆண்டிலிருந்து நெற் சந்தைப்படுத்தும் சபையானது நெல்லைக் கொள்வனவு செய்வதில் தீவிரமாகப் பங்கு கொள்ளவில்லை. எனினும் கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்தினாலும் வேளாண்மையாளர்கள் அமைப்புக்களினாலும் கொள்வனவு செய்யப்பட்ட நெல்லின் விலை கிலோ ஒன்றிற்கு ரூ. 9.00 இருந்து ரூ.12.40 என்ற வீச்சைக் கொண்டிருந்தமையினால் மேலதிக உற்பத்தி காலத்தில் விலைகளை உறுதியாக வைத்திருக்க உதவியது.

உற்பத்தி செலவு அதிகரிப்பும், இலாபமீட்டும் தன்மை குறைவடைந்தமையும் நெற்செய்கைத்துறை

எதிர்நோக்கும் பிரச்சனைகளில் ஒன்றாகும். விசேடமாக தொழில் கூலிகள், உழவு இயந்திரங்களை வாடகைக்கமர்த்தும் செலவு, மற்றும் விவசாய இரசாயன பொருட்கள் போன்ற உள்ளீட்டுச் செலவு அதிகரித்ததன் காரணமாக கடந்த பல ஆண்டுகளாக நெல்லின் சராசரி உற்பத்திச் செலவு அதிகரித்துள்ளது. இச் செயற்பாடானது சில மாவட்டங்களில் நெற் செய்கையை விசேடமாக ஈர வலயத்தில் இலாபமளிக்காததாக்கியுள்ளது. இப்பிரதேசங்களை இனங்கண்டு ஆராய்ச்சியை மேற்கொண்டு இந்த நெல் வேளாண்மையாளர்களை ஏனைய உணவுப் பயிர்களை உற்பத்தி செய்வதற்கு அறிவுறுத்துவதற்காக சிபார்சு செய்யும் நோக்குடன் இப் பிரச்சனைகளை அரசாங்கம் அங்கீகரித்து 1998 இல் வேளாண்மைத் திணைக்களத்திற்கு விசேட நிதி ஒதுக்கீடு ஒன்றைச் செய்துள்ளது.

13,000 வேளாண்மையாளர்களுக்கிடையில் விஞ்ஞான ரீதியிலான பயிர்ச்செய்கை தொடர்பாக வேளாண்மையாளர் விழிப்புணர்ச்சியை முன்னேற்றுவதற்காக தொடர்ந்து மூன்றாவது ஆண்டாக வேளாண்மைத் திணைக்களத்தின் விரிவாக்கல் பிரிவு விசேட "யயா" செய்முறைப் பயிற்சித் திட்டத்தை தொடர்ந்து நடாத்தியது. சகல தென் கிழக்காசிய பிராந்திய நாடுகள் மற்றும் ஏனைய ஆசிய நாடுகளான தாய்லாந்து, மியன்மார், மற்றும் பிலிப்பைன்ஸ், போன்ற நாடுகளைவிட இலங்கையின் நெல் விளைச்சல் உயர்வானதாகும். எனினும் சீனா, தென்கொறியா மற்றும் யப்பான் போன்ற நாடுகளில் அடையப்பட்ட விளைச்சல் அளவுகள் இலங்கையால் பெறப்பட்ட நெல் விளைச்சலைவிட ஒன்றரை மடங்கு அதிகமானதாகும். ஆகையால் இலங்கையில் நெல் விளைச்சல் மேலும் அதிகரிப்பதற்கான உள்ளார்ந்த வளமொன்று வெளிப்படையாகக் காணப்படுகிறது.

1996/97 இலங்கை மத்திய வங்கியின் நுகர்வோர் நிதி சமூக பொருளாதார அளவீட்டின்படி, ஆண்டுக்கான தலைக்குரிய அரிசி நுகர்வு 106 கிலோக் கிராம்களாகும். விரயம் மற்றும் விதை நெல் தேவைகள் என்பனவற்றுக்கான சீராக்கங்களின் பின்னர், நுகர்வுக் கான கிடைப்பனவில் 83 சதவீதமான சுயபூர்த்தியைப் பிரதிபலித்தது. உள்நாட்டு வழங்கல்களுக்கான பற்றாக் குறையானது இறக்குமதிகள் மூலம் ஈடுசெய்யப்பட்டது. 1998இல் 168,000 மெற்றிக் தொன் அரிசி இறக்குமதி செய்யப்பட்டது. இவ் அரிசி இறக்குமதியில் 75 சதவீதம் அல்லது 125,000 மெற்றிக் தொன்கள் சனவரி மாத காலப்பகுதியில் இறக்குமதி செய்யப்பட்டதுடன் உள்நாட்டுச் சந்தையில் அரிசிக்கான விலை அசைவுகளைக் குறைக்கும் நோக்குடன் அரிசி இறக்குமதிகளின் மீது தீர்வைத் தளர்த்தலொன்று அறிமுகப்படுத்தப்பட்டது. தீர்வைத் தளர்த்தலை செயற்படுத்தி அரிசியை இறக்குமதி செய்வதற்கு 1998ஆம் ஆண்டு இறுதிக் காலத்தில் இறக்குமதியாளர்களிடம் பலமான இடம் இருந்தபோதிலும், வேளாண்மையாளரின் நலனைக் கருத்திற்கொண்டு நியாயமான அளவில் நெல்லின் விலையை உறுதியாக வைத்திருக்கும் நோக்குடனும் அரசாங்கம் அவர்களது வேண்டுகோளை ஏற்கவில்லை.

**ஏனைய களப்பயிர்கள்**

1998இல் ஏனைய களப்பயிர்கள் கலப்புச் செயலாற்றம் ஒன்றைக் காட்டியது. உயர் பெறுமதி மிக்க உருளைக்கிழங்கு, வெங்காயம், மற்றும் மிளகாய் உற்பத்தி வீழ்ச்சியையும் பருப்பு வகைகளான உழுந்து, பயறு, சோயா, மற்றும் தட்டைப்பயறு என்பனவற்றின் உற்பத்தி அதிகரிப்பொன்றையும் சுட்டிக்காட்டியது.

தற்காலிக மதிப்பீடுகளின்படி குறித்துரைக்கப்பட்ட உற்பத்திகளான உழுந்து (30 சதவீதம்) பயறு (14 சதவீதம்) சோயா (55 சதவீதம்) மற்றும் தட்டைப்பயறு (5 சதவீதம்) அதிகரித்தது. விளைச்சலில் 14 சதவீதமானதொரு முன்னேற்றத்தைக் கொண்டிருந்த தினால் தட்டைப் பயற்றின் வெளியீடு அதிகரித்தது. 1997 உடன் ஒப்பிடுகையில் நிலக்கடலை, மற்றும் எள்ளு ஆகியவற்றின் உற்பத்தி வீழ்ச்சியடைந்தன. பயிர்ச் செய்கைக்குட்பட்ட நிலப்பரப்பு அதிகரிக்கப்பட்டமை மற்றும் விளைச்சலில் ஏற்பட்டதொரு அதிகரிப்பு என்பன உழுந்து, பயறு, மற்றும் சோயா என்பனவற்றின் அதிகரித்த வெளியீட்டிற்குப் பங்களிப்புச் செய்தன. சோளம் மற்றும் குரக்கன் போன்ற தானியப் பயிர்களின் உற்பத்தி குறிப்பிடத்தக்களவு அதிகரிப்பைப் பதிவு செய்தது. சோளம் உற்பத்தி 49 சதவீதத்தினால் அதிகரிக்க குரக்கன் உற்பத்தி பிரபலமானதொரு ஆரோக்கிய உணவாக இடம் பிடித்து 35 சதவீதத்தால் அதிகரித்தது.

1996இல் இறக்குமதித் தடை நீக்கப்பட்டதிலிருந்து மலிவான இறக்குமதிகளால் மிளகாய், உருளைக்கிழங்கு, சின்ன வெங்காயம் மற்றும் பெரிய வெங்காயம் என்பன கடுமையான போட்டிக்குள்ளாக்கப்பட்டிருந்ததுடன் 1998இல் மேலும் வெளியீட்டு வீழ்ச்சியைக் காட்டியது. உருளைக்கிழங்கு உற்பத்தி செய்யப்பட்ட பரப்பளவு 64 சதவீதத்தினால் 2,300 எக்டேயர்களுக்கு வீழ்ச்சியடைந்ததுடன், பெரிய வெங்காய உற்பத்தியின் கீழ்வரும் பரப்பளவு 52 சதவீதத்தினால் 1,400 எக்டேயர்களுக்கு வீழ்ச்சியடைந்தது. இந்தியா மற்றும் பாக்கித்தானுடனான உருளைக்கிழங்கு இறக்குமதிகள் அதிகரிக்கப்பட்டதால் பெருமளவான நுகர்வோருக்கு உதவியதுடன், விலை நலன்களை அனுபவித்து வந்த குறிப்பாக உருளைக்கிழங்கு வேளாண்மையாளர்களின் உயர்ந்தளவில் பாதுகாக்கப்பட்டு வந்த சந்தை இல்லாதொழிக்கப்பட்டது. கடந்தஆண்டில் 35 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்த உருளைக்கிழங்கு உற்பத்தி மேலும் 61 சதவீதத்தினால் 25,900 மெற்றிக் தொன்களுக்கு வீழ்ச்சியொன்றைப் பதிவு செய்தது.

1998இல் பெரிய வெங்காய உற்பத்தி 40 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. எனினும் 1997 உடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டில் இறக்குமதி செய்யப்பட்ட பெரிய வெங்காயத்தின் அளவும் 24 சதவீதத்தினால் 90,700 மெற்றிக் தொன்களுக்கு வீழ்ச்சியடைந்தது. இந்தியாவில் பெரிய வெங்காய உற்பத்தியில் ஏற்பட்ட கடுமையான வீழ்ச்சி காரணமாக கொண்டுவரப்பட்ட ஏற்றுமதித் தடையினால் இந்நிலைமை ஏற்பட்டது. இது உள்நாட்டு விலைகளை 1998 நவெம்பரில் கிலோ ஒன்றுக்கு ரூ.71.25 இற்கு 64 சதவீத மேல் நோக்கிய அசைவுக்கு இட்டுச் சென்றது.

உருளைக்கிழங்கின் உற்பத்தியில் காணப்பட்ட மோசமான செயலாற்றத்திற்கு பல காரணிகள் காரணமாயிருக்க முடியும். 1968 இலிருந்து 1996 வரை நுகர்வுக்கான உருளைக்கிழங்கின் இறக்குமதி முழுமையாகத் தடை செய்யப்பட்டமையின் காரணமாக உருளைக்கிழங்கு மிக உயர்ந்த பாதுகாப்பினைக் கொண்ட பயிராக விளங்கியது. உயர்ந்தளவு பாதுகாப்பின் விளைவாக உருளைக்கிழங்கு பயிர்ச் செய்கை பல ஆண்டுகளாக மிகவும் திறன்குறைந்ததாக விளங்கியதுடன் விளைவு மட்டம் எக்டேயரொன்றிற்குரிய விளைச்சலான ஏறத்தாழ 16 மெற்றித் தொன்களிலிருந்து ஏறத்தாழ அரைப்பங்கிற்கு வீழ்ச்சியடைந்து ஏறத்தாழ 10 மெற்றிக் தொன்களாக விளங்கியது. இறக்குமதிக் கட்டுப்பாடுகள் இருந்த காலத்தில் உருளைக்கிழங்கு மிக இலாபம் தரும் பயிராக இருந்தது. இதன் விளைவாக குறிப்பாக நுவரெலியா மாவட்டத்தில் தமது நிலங்களைப் பயிர்ச்செய்கைக்காக குத்தகைக்கு விடும் பெரும்பாலான உருளைக்கிழங்கு வேளாண்மையாளர்கள் பொருத்தமான வேளாண்மை நடைமுறைகளைப் பின்பற்றாததுடன் பயிர்ச் சுழற்சி நிகழ்ச்சித் திட்டத்தையும் புறக்கணித்திருந்தனர். சிலர் தமது வயல்களில் உருளைக் கிழங்கினை தொடர்ச்சியாகப் பயிரிட்டமையானது மண் நோய்களுக்கும் இதனைத் தொடர்ந்து குறைவான விளைச்சலுக்கும் வழியமைத்தது. உள்ளூர் உருளைக்கிழங்கின் உற்பத்திச்செலவு கி.கிறாமிற்கு ஏறத்தாழ ரூ.26 ஆக அமைந்து மற்றைய நாடுகளுடன் ஒப்பிடுகையில் உயர்வாக இருந்தது. உற்பத்திச்செலவு மிக உயர்வாக இருந்தமைக்கு மோசமான விளைச்சல் மொத்த உற்பத்திச் செலவில் 50 சதவீதத்திற்கும் கூடுதலான பங்கிற்கு வகைகூறும் விதை உருளைக் கிழங்கின் உயர்ந்த செலவு மற்றும் உயர்ந்த கூலி வீதங்கள் என்பனவே முக்கிய காரணங்களாக இருந்தன. ஒல்லாந்து அல்லது அவுத்திரேலியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட விதை உருளைக்கிழங்கு முகிழ்களிலேயே இலங்கை பெருமளவிற்குத் தங்கியிருக்கிறது. விதை உருளைக்கிழங்கு தொகை வடிவிலிருந்ததுடன் இறக்குமதி செய்யப்பட்ட விதை மிகவும் செலவு கூடியதாகவும் காணப்பட்டது. இலங்கையைப் போலன்றி இந்தியா அதன் சொந்த விதை உருளைக் கிழங்குத் தேவைப்பாடுகளை சிறப்பாக இந்தியாவின் வட பகுதியிலிருந்து மிகக்குறைந்த செலவில் பெற்றுக் கொள்கிறது. இந்தியாவிலுள்ள தொழிலாளர் செலவும் இலங்கையைவிடக் குறைவானதாகும். மேலும் இந்தியாவில் சில உள்ளீடுகள் பெருமளவிற்கு உதவு தொகைப்படுத்தப்பட்டுள்ளன. எனவே 35 சதவீதத் தீர்வைப் பாதுகாப்புடன் கூட உள்ளூர் உருளைக்கிழங்கு உற்பத்தியாளர்களினால் இந்தியா, பாக்கித்தான் மற்றும் 15 ஏனைய நாடுகளிலிருந்தான மலிவு இறக்குமதி களுடன் போட்டியிடமுடியவில்லை. 1998இல் இலங்கை 116,000 மெற்றிக் தொன் உருளைக்கிழங்கை இறக்குமதி செய்ததுடன் இதில் 86 சதவீதம் இந்தியாவிலிருந்தும் பாக்கித்தானிலிருந்தும் வந்தன. 1998 இல் உருளைக கிழங்கின் இறக்குமதி 7 சதவீதத்தினால் அதிகரித்தது.

இறக்குமதிகளைக் கட்டுப்படுத்திய உரிமம் போன்ற தீர்வையல்லா தடைகளினூடாக பெருமளவு பாதுகாப்பினைக் கொண்டிருந்த செத்தல் மிளகாய் இலாபம்தரும் பயிராக இருந்தது. எனினும் இறக்குமதிக் கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டமையானது உயர்ந்த செலவில் அமைந்த உள்ளூர் உற்பத்திகளை போட்டித் தன்மையற்றதாக்கின. மிளகாயின் கீழான பரப்பளவு 10 சதவீதத்தினால் 21,600 எக்டேயர்களுக்கு வீழ்ச்சியடைந்த வேளையில் உற்பத்தி 13 சதவீதத்தினால் 15,600 மெற்றிக் தொன்களுக்கு வீழ்ச்சியடைந்தது. 1998இல் மிளகாய் இறக்குமதி 19,200 மெற்றிக் தொன்களுக்கு 45 சதவீதத்தினால் அதிகரித்தது.

மிளகாய், உருளைக்கிழங்கு, வெங்காயம் (உயர்ந்த பெறுமதி கொண்டபயிர்கள்) என்பன நீங்கலான இப் பயிர்களில் பெரும்பாலானவை அரிசியுடன் ஒப்பிடுகையில் அரசிடமிருந்து குறைந்தளவு கவனத்தையே பெறுவது குறைந்தளவு ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திக்கு காரணமாகிறது. வேளாண்மையாளர்கள் மரபு ரீதியான பயிர்ச்செய்கை முறைகளையே அடிக்கடி பயன்படுத்துவதுடன் வளமாக்கி போன்ற மிகக் குறைந்த மட்ட உள்ளீடுகளுடன் மழைநீரை முழுதாக நம்பிய நிலைமைகளின்கீழ் பெரும்பாலான பயறு வகைகளையும் தானியங்களையும் பயிர் செய்வதும் குறைந்த மட்ட பயிர் முகாமைத்துவத்தைப் பிரதிபலிப்பதுடன் தாழ்ந்த விளைச்சல் மட்டத்திற்கும் இட்டுச் செல்கிறது.

### காய்கறிகளும் பழங்களும்

கிடைக்கத்தக்கதாகவுள்ள ஆரம்ப மதிப்பீடுகளின் படி இடை வெப்ப வலய பயிரினமான கரட், கோவா, பீட்றூட், லீக்ஸ் போன்ற மலையக காய்கறிகள் நீர்ப்பாசன வசதிகளின் கீழ் மிகச்செறிவாக குறிப்பாக மத்திய மாகாணத்திலும் ஊவா மாகாணத்திலும் உற்பத்தி செய்யப்படுவதுடன் 1998 இல் 6 சதவீதத்தினால் 169,900 மெற்றிக் தொன்களுக்கு அதிகரித்தது. இவ்வதிகரிப்பிற்கு

நுவரெலியா மற்றும் வெலிமட பிரதேசங்களில் காய்கறிகளின் கீழ் கொண்டு வரப்பட்ட பரப்பளவு அதிகரித்தமை காரணமாக இருந்ததுடன் பயிர்ச் செய்கை உருளைக்கிழங்கிலிருந்து மற்றைய வகைக் காய்கறிகளுக்கு பெயர்ச்சியடைந்தமை யையும் பிரதிபலிக்கின்றது. மலையக காய்கறிகளின் அதிகரித்த வழங்கல், பெரும்பாலும் ஆண்டு முழுவதும் அவற்றின் விலைகளை உறுதியாக வைத்திருந்தன. எனினும் முக்கியமாக வடமேல் மாகாணம், வடமத்திய மாகாணம், தென் மாகாணம் ஆகியவற்றின் பெரும்பாலும் நெல் நிலங்களில் சிறு போகத்தில் பயிர் செய்யப்படும் பாகற்காய், புடலங்காய், பூசணிக்காய், கத்தரிக்காய், போன்ற தாழ்நில காய்கறிகளின் பயிர்ச்செய்கை வீழ்ச்சியடைந்தது. இவ்வீழ்ச்சிக்கு போதுமான மழை வீழ்ச்சியும் நீர்ப்பாசன நீரும் அத்தகைய நிலங்களை நெற் செய்கைக்காக அதிகளவில் பயன்படுத்த வழிவகுத்தமையே காரணமாகும். பொதுவாக இவ்வாண்டில் காய்கறிகளின் உற்பத்தி முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 352,000 மெற்றிக் தொன்களுக்கு சிறிதளவால் வீழச்சியடைந்தது. எனினும் காய்கறிகளின் ஏற்றுமதி 7,700 மெற்றிக்தொன்களுக்கு 12 சதவீதத்தினால் அதிகரித்தது.

மாம்பழத்தின் உற்பத்தி 1997 உடன் ஒப்பிடுகையில் 2 சதவீதங் கொண்ட அதிகரிப்பினைக் காட்டியது. எம்பிலிப்பிட்டிய மற்றும் உடவளவைப் பிரதேசங்களில் மேற் கொள்ளப்பட்ட பெருமளவு வாழைப்பழச் செய்கையானது 1998இல் உள்நாட்டு நிரம்பலை அதிகரித்ததுடன் வாழைப்பழத்தின் உற்பத்தியாளர் விலைகள் வீழ்ச்சியடைந்தன. நுகர்வோர் விலைகளிலும் சிறிதளவு வீழ்ச்சி காணப்பட்டது. பப்பாளிப் பழம் மற்றும் அன்னாசி என்பனவற்றின் உற்பத்தி முறையே 13 சதவீதத்தினாலும் 18 சதவீதத்தினாலும் வீழ்ச்சியடையுமென மதிப்பிடப்பட்டுள்ளது. 1998இல் உடன் பழங்களின் ஏற்றுமதிகள் 10 சதவீதத்தினால் 2,670 மெற்றிக் தொன்களுக்கு வீழ்ச்சியடைந்தன.

இலங்கையில் பழவகை உற்பத்தி வர்த்தகமல்லா முறைகளிலேயே பெருமளவிற்கு மேற் கொள்ளப்படுகிறது. கம்பகா மற்றும் குருநாகல் மாவட்டங்களில் அன்னாசிச் செய்கை அம்பாந்தோட்டை மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களில் வாழைப்பழச் செய்கை என்பன தவிர வேறு ஒழுங்கான பழத்தோட்டம் எதுவும் இருக்க வில்லை. இசுறோபரிஸ் நுவரெலியாவில் பச்சை வீடுகளில் மிகச் செறிவான முறையில் பயிர் செய்யப் படுகின்றன. பழங்களில் மாம்பழம், வாழைப்பழம், அன்னாசி, மற்றும் பப்பாளி என்பன முக்கியமானவை களாகும். பழவகைகளின் பயிர்ச்செய்கை மற்றும் பதனிடல் மீதான ஆராய்ச்சிகள் மிகவும் வரையறுக்கப் பட்டிருந்தன. உள்ளூர் மற்றும் வெளிநாட்டுச் சந்தைகளுக்கான இப் பயிர்கள் சிலவற்றின் பயிர் செய்கைக்கும் பதனிடலுக்கும் குறிப்பிடத்தக்க உள்ளார்ந்த வளம் காணப்படுகின்றது.

**சீனி**

1998இல் சீனி உற்பத்தி 61,549 மெற்றிக் தொன்களென மதிப்பிடப்பட்டு 1997 உடன்

**அட்டவணை 3.7**
**சீனித்துறை மீதான புள்ளி விபரங்கள்**

| விடயம் | அலகு | இங்குரான சீனித் தொழிற்சாலை | | செவனகல சீனித் தொழிற்சாலை | | பெல்வத்தை சீனித் தொழிற்சாலை | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 1997(அ) | 1998(ஆ) | 1997(அ) | 1998(ஆ) | 1997(அ) | 1998(ஆ) | 1997(அ) | 1998(ஆ) |
| 1. கரும்பு பயிரிடப்பட்ட (இ) நிலப்பரப்பு (முளை தோன்றியது) | எக்டேயர்கள் | 1,679 | 916 | 3,147 | 3,157 | 4,836 | 4,470 | 9,662 | 8,543 |
| 2. அறுவடை செய்யப்பட்ட நிலப்பரப்பு (இ) | எக்டேயர்கள் | 934 | - | 2,377 | 2,422 | 4,435 | 3,928 | 7,746 | 6,350 |
| 3. அறுவடை செய்யப்பட்ட கரும்பு(இ) | மெ.தொன்'000 | 69 | - | 169 | 195 | 148 | 174 | 386 | 369 |
| 4. தனியாரிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட கரும்பு | மெ.தொன்'000 | 26 | - | 2 | 2 | 361 | 358 | 389 | 360 |
| 5. பிழியப்பட்ட கரும்பின் அளவு | மெ.தொன்'000 | 95 | - | 169 | 197 | 509 | 532 | 773 | 729 |
| 6. சராசரி விளைச்சல் (இ) | மெ.தொன்கள்/ எக்டேயர் | 73 | - | 70 | 81 | 33 | 45 | 53 (ஈ) | 58 |
| 7. சீனி உற்பத்தி (கூட்டப்பட்டவை தவிர்ந்த) | மெ.தொன்'000 | 6 | - | 15 | 17 | 42 | 44 | 63 | 61 |
| 8. சீனி பெறப்பட்ட வீதம் (உ) | % | 6.20 | - | 8.76 | 8.7 | 8.34 | 8.35 | 8.15 | 8.37 |

(அ) திருத்தியமைக்கப்பட்டது.
(ஆ) தற்காலிகமானவை.
(இ) முதன்மைத் தோட்டங்களையும் ஒதுக்கீட்டாளர்களையும் உள்ளடக்கும்.
(ஈ) இங்குரானை சீனித் தொழிற்சாலையின் தரவுகள் நீங்கலாக.

(உ) மீளப் பெறுகை விகிதம் = $\frac{\text{உற்பத்தி செய்யப்பட்ட சீனி}}{\text{பிழியப்பட்ட கரும்பின் அளவு}} \times 100$

மூலங்கள்: வரையறுக்கப்பட்ட பெல்வத்தை சீனிக் கைத்தொழில்கள்.
வரையறுக்கப்பட்ட செவனகலை சீனிக் கைத்தொழில்கள்.
வரையறுக்கப்பட்ட இங்குரானை சீனிக் கைத்தொழில்கள்.

ஒப்பிடுகையில் ஏறத்தாழ 2 சதவீதம் கொண்ட சிறிதளவு வீழ்ச்சியைக் காட்டியது. உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு தனியார்மயமாக்கல் வெற்றியளிக்காததால் மீண்டும் அரசாங்கத்திடம் ஒப்படைக்கப்பட்ட இங்குரான சீனித் தொழிற்சாலை தொழிற்படாமையே காரணமாகும். மற்றைய இரு சீனித் தொழிற்சாலைகளான பெல்வத்தையும் செவனகலவும் இவ்வாண்டில் அதிகரித்த உற்பத்திகளைக்காட்டி முறையே ஏறத்தாழ 5 சதவீத மற்றும் 13 சதவீத அதிகரிப்புக்களைப் பதிவு செய்தன. பெல்வத்தையில் அறுவடை செய்யப்பட்ட நிலப்பரப்பு குறைவடைந்தபோதும் இவ்விரு தொழிற்சாலைகளினதும் சீனி உற்பத்தி மேம்பட்டமைக்கு இவ்வாண்டில் கரும்பு அறுவடை அதிகரித்தமையே காரணமாகும். சாதகமான வானிலை நிலைமைகள் பெல்வத்தையில் கரும்பின் சராசரி விளைச்சலை எக்டேயர் ஒன்றிற்கு ஏறத்தாழ 45 மெற்றிக் தொன்களுக்கு 36 சதவீதத்தினால் அதிகரிக்க உதவிய வேளையில் செவனகலவின் எக்டேயரொன்றிற்கான கரும்பின் விளைச்சல் 81 மெற்றிக் தொன்களுக்கு 16 சதவீதத்தினால் அதிகரித்தது. விளைச்சலில் முன்னேற்றம் காணப்பட்டபோதும் பெல்வத்தையினதும் செவனகலவினதும் விளைச்சல் மட்டங்களில் பரந்தளவு வேறுபாடுகள் காணப்பட்டன. இதற்கு இப் பெருந்தோட்டங்கள் மேற்கொண்ட வேறுபட்ட நீர்ப்பாசன முறைகளே பெருமளவிற்குக் காரணமாகும். பெல்வத்தை கரும்புச் செய்கை மழை நீரை முழுமையாக நம்பியிருக்கையில் செவனகல நீர்ப்பாசன வசதிகளின் கீழ் இருந்தது. 1998இல் இவ்விரு கம்பனிகளினாலும் கொள்வனவு செய்யப்பட்ட தனியார்துறைக் கரும்பின் அளவு ஏறத்தாழ 1997 இன் அதே மட்டத்திலேயே காணப்பட்டது.

இலங்கையின் சீனிஉற்பத்தி உள்நாட்டுநுகர்வுத் தேவையின் ஏறத்தாழ 10 - 12 சதவீதத்தினை ஈடு செய்ய மட்டுமே போதுமானதாக இருந்தது. 1997 இல் இறக்குமதி செய்யப்பட்ட சீனி (545,000 மெற்றிக் தொன்) பெருமளவில் இருப்பில் வைக்கப்பட்டிருந்தமையின் காரணமாக 1998இல் சீனி இறக்குமதி 444,300 மெற்றிக் தொன்களுக்கு ஏறத்தாழ 19 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. இக் காலப்பகுதியில் உலகின் சீனி விலைகள் மெற்றிக் தொன்னொன்று ஐ.அ.டொலர் 337 இலிருந்து ஐ.அ.டொலர் 291 இற்கு ஏறத்தாழ 14 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. 1998 சனவரிக்கு முன்னர் இறக்குமதி செய்யப்பட்ட சீனியின் மீது பெறுமான விகித வரியினை விதித்ததன் மூலம் அரசாங்கம் சீனியின் விலையை மெற்றிக் தொன்னுக்கு ஏறத்தாழ ஐ.அ.டொலர் 500 இல் உறுதிப்படுத்தியது. எனினும் 1998 சனவரியிலிருந்து சீனி இறக்குமதியின்மீது மெற்றிக் தொன் ஒன்றிற்கு ரூ.3500 இனைக் கொண்ட ஒரே வீதம் விதிக்கப்பட்டது. 1998 இன் சராசரி இறக்குமதி விலையான கி.கிறாமொன்றுக்கான ரூ.18.80 உடன் ஒப்பிடுகையில் சீனியின் மீதான பெறுமானவிகித வரி 1997 இன் 25 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 18 சதவீதமாக விளங்கியது. 1998இல் சீனியின் சராசரி உள்நாட்டு நுகர்வோர் விலை 3 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது.

வரைபடம் 3.5
மொத்தச் சீனிக் கிடைப்பனவு




தற்பொழுது பெருமளவு கரும்புத் தோட்டங்கள் இலங்கையின் வரண்ட வலயத்தில் (அம்பாறை மற்றும் மொனராகலை மாவட்டங்கள்) குவிந்து காணப்படுகின்றன. கரும்புப் பயிர்ச்செய்கையும் பதனிடல் கைத்தொழிலும் இப்பிரதேசத்திலுள்ள பெரும் எண்ணிக்கையான குடியிருப்பாளர்களுக்கு (20,000 குடும்பங்களுக்கு மேல்) நேரடியான மற்றும் மறைமுகத் தொழில் வாய்ப்புக்களை வழங்குகின்றன. எனினும், ஒப்பீட்டு ரீதியான குறைந்த விளைச்சல், தாழ்ந்த சீனி பெறல் வீதம், மற்றும் அடிக்கடி எழும் தொழிலாளர் பிரச்சனைகள் என்பன இக்கைத்தொழிலை ஓரளவு பாதித்துள்ளன. பன்னாட்டு விலைகளில் ஏற்பட்ட வீழ்ச்சி கைதொழிலின் நிதியியல் ஆற்றலை குறைத்துவிட வழிவகுத்ததன் காரணமாக இந்நிலைமை மேலும் மோசமடைந்தது. பன்னாட்டு விலைகளில் பெருமளவு வீழ்ச்சி காணப்பட்டபோதும் 1998இல் ரூபா விரைவாகத் தேய்வடைந்தமை, சீனி இறக்குமதிகள் மீதான அரசின் வரிகள் என்பன சீனியின் விலைகள் வீழ்ச்சியடையாமல் பாதுகாத்தன. இக் கைத்தொழிலின் நிதியியல் ஆற்றலை மேம்படுத்துவதற்கான எந்த ஒரு இறை ஊக்குவிப்பும் நுகர்வோர் மீது பழுவைச் சுமத்துவதன் மூலம் மட்டுமே சாத்தியமாகும்.

## 3.5 மீனும் விலங்கு வளர்ப்பும்

1998 இல் மீன் உற்பத்தி 8 சதவீதத்தினால் 260,100 மெற்றிக் தொன்களுக்கு அதிகரிக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது. கடல் மீன் உற்பத்தி (கரையோர ஆழ்கடல் மற்றும் கரைகடந்த) 230,200 மெற்றிக் தொன்களுக்கு அல்லது மொத்த மீன் உற்பத்தியில் 89 சதவீதத்திற்கு வகை கூறியது. அதிகரித்த கடல் மீன்

உற்பத்தி வடக்குக் கிழக்கு மாகாணங்களின் மேம்பட்ட உற்பத்தியைப் பிரதிபலிப்பதாயிருந்தது. கரைகடந்த மீன்பிடித்துறைக்கு பல நாட் படகுகள் மற்றும் கருவிகள் ஊடாகச் சிறந்த வசதிகளை வழங்கியதன் மூலம் இத்துறை ஊக்குவிப்புக்களையும் வலுப்படுத்தல்களையும் பெற்றுக்கொண்டமையும் இவ்வதிகரிப்பிற்கு உதவின.

பண்ணை மீன் உற்பத்தி (உள்நாடு, கரையோர நீர் மற்றும் இறால் வளர்ப்பு மற்றும் இறால் பண்ணை) 1998இல் ஏறத்தாழ 29,900 மெற்றிக் தொன்களுக்கு 11 சதவீதத்தினால் அதிகரித்தது. இதற்கு நீர்த் தேக்கங்களுக்கு மீன் குஞ்சுகள் அதிகரித்தளவில் விடுவிக்கப்பட்டமை நீரியல் மீன் வளர்ப்பு மூலவளங்களின் சிறந்த முகாமைத்துவம் மற்றும் பொருத்தமான கண்காணிப்பு என்பனவே முக்கிய காரணங்களாகும். 1997 இன் வெள்ளைப்புள்ளி நோயினால் பாதிக்கப்பட்ட இறால் பண்ணை 1998 இல் முழுமையாக மீட்சிபெற்றது. மீன்பிடித்துறையில் இத்துறை தற்பொழுது வெளிநாட்டுச் செலாவணி வருவாய்களின் முக்கிய மூலமாக மாறியுள்ளது. 1998இல் உள்ள இறால் பண்ணைகளின் மொத்த எண்ணிக்கை 970 என மதிப்பிடப்பட்டுள்ளது.

**அட்டவணை 3.8**
**மீன் உற்பத்தி**

மெற்றிக் தொன்கள் '000

| துணைத்துறை | 1996 | 1997(அ) | 1998(ஆ) |
|---|---|---|---|
| கடல் (இ) | 206 | 213 | 230 |
| பண்ணை மீன் வளர்ப்பு (ஈ) | 22 | 27 | 30 |
| மொத்தம் | 229 | 240 | 260 |

மூலம்: கடற்றொழில் நீர்வாழ் மூலவளங்கள் அபிவிருத்தி அமைச்சு.

(அ) திருத்தியமைக்கப்பட்டது.
(ஆ) தற்காலிகமானவை.
(இ) கரையோர மற்றும் ஆழ்கடல்.
(ஈ) உள்ளூர்த்துறை கரையோர உப்புநீர் இறால் மற்றும் இறால் பண்ணை உற்பத்திகளை உள்ளடக்குகின்றது.

வெள்ளைப்புள்ளி நச்சு நோய் திடீரென்று இறால்களைப் பாதித்தமைக்கு பண்ணைக்கு உள்ளேயும் பண்ணைக்கு வெளியேயுமான மிக மோசமான முகாமைத்துவ நடைமுறைகளே காரணமாகும். இரண்டு அல்லது மூன்று பின்னடைவுகளுக்குப் பின்னர், நீர் முகாமைத்துவ மற்றும் ஏனைய முகாமைத்துவ வழிமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்டதுடன் 1998இல் இறால் உற்பத்தி மீண்டும் தொடங்கியது. 1998 இல் பெரும்பாலும் அனைத்து இறால் உற்பத்திகளும் ஏற்றுமதி செய்யப்பட்டன. 1997 உடன் ஒப்பிடுகையில் இறால் ஏற்றுமதிகளின் மொத்த அளவும் ஏற்றுமதி வருவாய்களும் ஏறத்தாழ இரு மடங்காகின. சுங்கத்தரவுகளின்படி 1998 இல் இறால் ஏற்றுமதிகளின் மொத்த அளவு ஏறத்தாழ 6,038 மெற்றிக் தொன்களாக விளங்கிய வேளையில் ஏற்றுமதி வருவாய்கள் ஏறத்தாழ ரூ.5,087 மில்லியனாக இருந்தன.

மீன் பிடித்துறை நாட்டிற்கு மிக முக்கியத்துவம் வாய்ந்ததொரு துறையாகும். அண்மைய காலங்களில் இது மக்களுக்கு நல்ல தரமுள்ள மீனை போதுமானளவிற்கு வழங்குவதற்கும் கூடியளவு தொழில் வாய்ப்புக்களை உருவாக்குவதற்கும் அதிகளவிலான அறைகூவல்களை எதிர்கொண்டு வருகின்றது. இத்துறை உணவு உற்பத்தி மற்றும் ஊட்டச்சத்திற்கான மரபுவழி உதவுநராகவும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. மீன்பிடி நீரியல் மூலவள அபிவிருத்தி அமைச்சு குறிப்பாக துறைவாரியான உட்கட்டமைப்பை நவீனப்படுத்தவும் மீன் மூலவளங்களின் முகாமைத்துவத்தினை ஒழுங்கு முறைப்படுத்தவும் பல அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களையும் செயற்றிட்டங்களையும் நடைமுறைப் படுத்தியுள்ளது. 1997/98 காலப்பகுதி மீன்பிடித்துறையின் பொருளாதார வினைத்திறனை மேம்படுத்துவதற்கு தொடர்ச்சியாக எடுக்கப்பட்ட அமைப்பியல் ரீதியான சீராக்கங்களை கொண்ட காலப்பகுதியாக விளங்கியது. இச் சீராக்கங்கள் முக்கியமாக நீரியியல் மூலவளங்களை உறுதியாகத் தொடர்ந்து பெற்றுக்கொள்ளுதல், மீனின் தரத்தினை மேம்படுத்துதல், மற்றும் மீனவர் சமூகத்தின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துதல் என்பனவற்றின் மீது முக்கிய கவனம் செலுத்தின.

## விலங்கு வளர்ப்பு

நாட்டின் விலங்கு வளர்ப்புக் கைத்தொழிலில் மிக முன்னணி வாய்ந்ததும் நன்கமைக்கப்பட்ட துறைகளுமாக விளங்கும் பாற்பண்ணை மற்றும் கோழி வளர்ப்புக் கைத்தொழில் 1998 இல் நன்கு செயலாற்றின. கிடைக்கத்தக்க மதிப்பீடுகள் பசுப்பால் உற்பத்தி 1997 இன் 252 மில்லியன் இலீற்றர்களிலிருந்து 1998 இல் 256 மில்லியன் இலீற்றர்களுக்கு உயர்ந்து 2 சதவீத அதிகரிப்பை எடுத்துக்காட்டின. எருமைப்பால் உற்பத்தி 1997இன் 79 மில்லியன் இலீற்றர்களிலிருந்து 1998இல் 85 மில்லியன் இலீற்றர்களுக்கு 8சதவீதத்தினால் அதிகரித்தது. வரையறுக்கப்பட்ட கிரியா மில்க் இன்டஸ்றீஸ் (முன்னைய வரையறுக்கப்பட்ட மில்க் இண்டஸ்றீஸ் ஒவ் லங்கா கம்பனி) நாட்டின் பால் சேகரிப்பில் பெரும் பங்கிற்கு வகை கூறியது. பால் உற்பத்தியில் அதிகரிப்புக் காணப்பட்ட போதும் 1998இல் வரையறுக்கப்பட்ட கிரியா மில்க் இண்டஸ்ரீயினதும் வரையறுக்கப்பட்ட நெஸ்லே லங்காவினதும் பால் சேகரிப்புக்கள் 9 சதவீதத்தினாலும் 15 சதவீதத்தினாலும் முறையே 53 மில்லியன் இலீற்றர்களுக்கும், 29 மில்லியன் இலீற்றர்களுக்கும் வீழ்ச்சியடைந்தன. சேகரிப்பின் அளவில் வீழ்ச்சி ஏற்பட்டமைக்கு சிறந்ததர பால் உற்பத்திக்கு முக்கியத்துவம் தரப்பட்டமையே காரணமாகும். இதனைப் பொறுத்தவரையில் தரமான பாலை மேம்படுத்துவதற்காக விலை ஊக்குவிப்புத்

திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. எடுத்துக்காட்டாக 4.8 சதவீத பால் கொழுப்பையும் 8.3 சதவீத திண்ம கொழுப்பற்ற தன்மையையும் அல்லது 4 சதவீத பால் கொழுப்பையும் 85 சதவீத திண்ம கொழுப்பற்ற தன்மையையும் கொண்டிருக்கும் பாலுக்கு இலீற்றரொன்றிற்கு 50 சதம் மேலதிகமாக வழங்கப்பட்டது.

இலங்கை அரசாங்கத்திற்கும் இந்திய பாற்பண்ணை அபிவிருத்திச் சபைக்குமிடையிலான கூட்டு முயற்சியான வரையறுக்கப்பட்ட கிரியா மில்க் இண்டஸ்றீஸ் மேம்பாட்டு நடவடிக்கைகளை அடிமட்டத்திலிருந்தே ஆரம்பித்துள்ளது. பண்ணை வேளாண்மையாளர்களுக்கு தரமான மாட்டுத்தீவனத்தை பெயரளவு விலைகளில் வழங்கும் பொருட்டு மாட்டுத் தீவன உற்பத்திச் செயற்றிட்டமும் தொடங்கப்பட்டுள்ளது. அதேவேளை 1998இல் விலங்கு அபிவிருத்தி தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சு நட்டத்தில் இயங்கும் தேசிய விலங்கு வளர்ப்பு அபிவிருத்திச் சபையின் நடவடிக்கைகளை ஒழுங்கு முறைப்படுத்துவதன் மூலமாக விலங்கு வளர்ப்பு அபிவிருத்திச்சபை மிகையான அலுவலர்கள் சிலரை சுயவிருப்பு அடிப்படையில் நீக்கக் கூடியதாக இருந்தது. பண்ணைகளின் கொத்தணி முறையிலான செயற்பாடு தேசிய விலங்கு வளர்ப்பு அபிவிருத்திச சபையினால் முகாமைப்படுத்தப்படும் விலங்கு வளர்ப்பு பண்ணைகளின் மேந்தலைச் செலவுகளை பெருமளவிற்குக் குறைத்துள்ளது.

தனியார்துறையின் செல்வாக்குட்பட்டிருக்கும் கோழிப்பண்ணைக் கைத்தொழில் பெருமளவு எண்ணிக்கையான சிறு உற்பத்தியாளர்களையும் ஒரு சில பெரும் உற்பத்தியாளர்களையும் உள்ளடக்கியுள்ளது. நாட்டின் முட்டை உற்பத்தி 1998 இல் 876 மில்லியன் முட்டைகளுக்கு 2 சதவீதத்தினால் சிறிதளவு அதிகரித்தது. தீன் கலவைகளின் விலைகளில் ஏற்பட்ட வீழ்ச்சி விலங்குத்தீவனத்தின் விலைகள் ஆண்டு முழுவதும் உறுதியாக இருப்பதனை இயலச் செய்தது. சாதகமான உற்பத்தி விலைகளும் நியாயமான உறுதியான உள்ளீட்டு விலைகளும் உற்பத்தியாளர், நுகர்வோர் இருவருக்கும் உதவின.

விலங்கு வளர்ப்புத்துறையில் காணப்படும் முக்கிய தடைகளிலொன்று இனப் பெருக்க விலங்குகள் கிடைக்காமையேயாகும். வேளாண்மையாளர்களின் பண்ணையில் நல்ல இனப் பெருக்க இருப்பு கிடைக்காமையின் காரணமாக தேசிய விலங்கு வளர்ப்பு அபிவிருத்திச்சபையினால் விலங்குகளுக்கான (குறிப்பாக பாற்பண்ணை மற்றும் பன்றி) அவர்களின் கேள்வியை ஈடு செய்யமுடியாமல் இருந்தது. இப்பிரச்சனையைத் தணிக்கும் நோக்குடன் விலங்கு வளர்ப்பு இனப்பெருக்க செயற்றிட்டமொன்று (பாற்பண்ணைகளுக்காக) இந்தியாவின் தேசிய பாற்பண்ணை அபிவிருத்திச் சபையின் ஒத்துழைப்புடன் தொடங்கப்பட்டுள்ளது. மேலும், 1998இல் கால்நடை அபிவிருத்தி மற்றும் பெருந்தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சு சிறந்த இனப் பெருக்க விலங்குகளை இறக்குமதி செய்வதற்காக ரூ. ரூ. 30 மில்லியனுக்கு கூடுதலான தொகையைச் செலவிட்டது.

கிராமப் புறங்களில் காணப்படும் விலங்குகளின் மோசமான சுகாதாரம் மற்றும் பற்றாக்குறையான விரிவாக்கல் பணிகள் என்பனவும் விலங்கு வளர்ப்புக் கைத்தொழிலின் அபிவிருத்திக்கு ஒரு முட்டுக்கட்டையாகவுள்ளது. விலங்கு வளர்ப்பு அபிவிருத்தியையும் விரிவாக்கப் பணிகளையும் தரமுயர்த்துவதற்காக 1998இல் விலங்கு உற்பத்தி சுகாதார திணைக்களம் 52 புதிய மிருக வைத்தியர்களை நியமித்ததுடன் அவர்களை கிராமப் புறங்களுக்கு அனுப்பி வைத்தது. இவ்வலுவலாகள் தொழிற் பிரிவு மட்டத்தில் விலங்குகளின் சுகாதாரத்தையும் உற்பத்தி நிகழ்ச்சித் திட்டங்களையும் நடைமுறைப்படுத்தவும் கண்காணிக்கவும் பொறுப்பாக இருப்பர்.

## 3.6 உள்ளீடுகளும் கொடுகடனும்

### வளமாக்கி

1998இல் வளமாக்கி வழங்கல்கள் 535,133 மெற்றிக் தொன்களாக விளங்கி ஏறத்தாழ 5 சதவீத அதிகரிப்பினைப் பதிவு செய்தது. 1998 இன் முதலரைப் பகுதியில் காணப்பட்ட மேம்பட்ட விலைகள், சாதகமான வானிலை நிலைமைகள் சிறப்பு வளமாக்கி கடன் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டமை என்பன தேயிலைத்துறையின் வளமாக்கிப் பயன்பாட்டில் 12 சதவீத அதிகரிப்பு ஏற்பட பங்களித்தன. இறப்பருக்கான சந்தை விலைகளில் வீழ்ச்சி காணப்பட்ட போதும் இறப்பர் துறைக்கான வளமாக்கி வழங்கல்கள் 33 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு வளமாக்கிச் செலவு புதிய பயிரிடல்/மீளப் பயிரிடல் உதவு தொகைப் பொதியில் ஒரு தவிர்க்க முடியாத பகுதியாக கருதப்பட்டமையே காரணமாகும். பங்கேற்பு

**அட்டவணை 3.9**
**பயிர்களின் படியான வளமாக்கிப் பயன்பாடு**

'000 மெற்றிக் தொன்கள்

| பயிர் | 1996 | 1997(அ) | 1998(ஆ) |
|---|---|---|---|
| நெல் | 238 | 224 | 228 |
| தேயிலை | 154 | 162 | 182 |
| இறப்பர் | 17 | 12 | 16 |
| தெங்கு | 39 | 34 | 38 |
| ஏனைய களப் பயிர்கள் | 55 | 49 | 49 |
| ஏனைய ஏற்றுமதிப் பயிர்கள் | 6 | 7 | 11 |
| ஏனையவை | 16 | 20 | 13 |
| மொத்தம் | 524 | 508 | 537 |

(அ) திருத்தியமைக்கப்பட்டது.
(ஆ) தற்காலிகமானவை.

மூலம்: தேசிய வளமாக்கிச் செயலகம்.

தொழில்நுட்ப மாற்றல் நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ் தெங்கு பயிர்ச்செய்கைச் சபை தெங்குப் பயிர்ச்செய்கையில் இரசாயன வளமாக்கியின் பயன்பாட்டினை ஊக்குவித்தது. 1998இல் வளமாக்கிப் பாவனையின் மிகப் பெரும் அதிகரிப்பு (57 சதவீதம்) ஏற்றுமதி வேளாண்மைப் பயிர்த் துறையிலேயே காணப்பட்டது. நெற் துறைக்கான வளமாக்கி வழங்கல்கள் சிறிதளவு அதிகரிப்பினைப் பதிவு செய்தவேளையில் ஏனைய உணவுப் பயிர்தத்துறைக்கான வழங்கல்கள் 1998இல் மாற்றமின்றிக் காணப்பட்டன.

1997இன் திருத்தப்பட்ட வளமாக்கி உதவு தொகைத் திட்டத்தின்கீழ் யூரியாவிற்கு மட்டும் வரையறுக்கப்பட்டிருந்த உதவு தொகை 1998இலும் தொடர்ந்தது. தேசிய வளமாக்கிச் செயலகம் களமட்ட வேளாண்மை விரிவாக்க அலுவலர்களின் உதவியுடன் 1998இல் வளமாக்கி தரக் கட்டுப்பாட்டு நிகழ்ச்சித் திட்டத்தினை அறிமுகப்படுத்தியது. இவ்வலுவலர்கள் உள்ளூர் வர்த்தகர்களிடமிருந்து மாதிரி வளமாக்கிகளை சேகரிக்கவும் இம் மாதிரிகளை வேளாண்மைத் திணைக்களம்/ ஆராய்ச்சி நிறுவனங்களின் ஆய்வு கூடங்களில் பகுப்பாய்வு செய்யவும் அதிகாரம் வழங்கப்பட்டது. இவ்வாண்டில் இந் நோக்கங்களுக்காக 11 மாவட்டங்களிலுள்ள அலுவலர்களுக்குப் பயிற்சியளிக்கப்பட்டது.

வரைபடம் 3.6
வளமாக்கிப்பயன்பாடு : முக்கிய பயிர் வகைகளின்படி (1990 = 100)




## விதைகள்

தேசிய விதைக் கொள்கையில் பிரகடனப்படுத்தப் பட்டவாறு, 1998இல் வேளாண்மைத்திணைக்களம் தரமான விதைகள் மற்றும் பயிரிடல் மூலப் பொருட்கள் என்பனவற்றின் வழங்கலை உறுதிப்படுத்துவதற்கு தொடர்ந்தும் ஒத்துழைப்பினையும் தேவையான ஆதரவினையும் வழங்கியது. எனினும் போதுமான விதை நெல் பற்றாக்குறையாக இருப்பதன் காரணமாக நெல்துறை எதிர் நோக்கும் பிரச்சனைகளை அங்கீகரிக்கின்ற விதத்தில் அம்பாறை, அநுராதபுரம், அம்பாந்தோட்டை, குருநாகல், மற்றும் பொலனறுவை மாவட்டங்களில் விதை நெல்லை உற்பத்தி செய்வதற்கான திட்டமொன்றினை 1999 வரவு செலவுத் திட்டத்தில் அரசாங்கம் அறிவித்தது. இந் நிகழ்ச்சித் திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கும் செறிவான நிலப் பயன்பாட்டின் மூலமாக சராசரி விளைச்சலை அதிகரிப்பதற்கும் வேளாண்மைத் திணைக்களத்திற்கு சிறப்பு ஒதுக்குகள் வழங்கப்பட்டன.

1998இல் வேளாண்மைத் திணைக்களம், மாகாண சபைகள், மகாவலி மேலாண்மைச்சபை, கூட்டுறவு நிலையங்கள், தனியார்கம்பனிகள், வேளாண்மையாளர் அமைப்புக்கள் போன்ற அரச மற்றும் தனியார் துறை அமைப்புக்களினால் வழங்கப்பட்ட விதை நெல்லின் அளவு 10,965 மெற்றிக் தொன்களாக விளங்கின.இது நாட்டின் விதை நெல் தேவையில் ஏறத்தாழ 9 சதவீதத்தினை ஈடுசெய்யவே போதுமானதாகும். மீதியை நெல் வேளாண்மையாளர்கள் தாமாகவே ஈடுசெய்ய வேண்டியவர்களாக இருந்தனர். இந் நிறுவனங்களின் விதைநெல் உற்பத்தியின் ஒரு பகுதியை மட்டுமே வேளாண்மைத் திணைக்களம் சான்று படுத்தியது.

1998இல் ஏனைய களப்பயிர்களின் விதை, காய்கறிவிதை, மற்றும் உருளைக் கிழங்கு விதை என்பனவற்றின் வழங்கல்கள் முறையே 50 சதவீதத்தினாலும் 48 சதவீதத்தினாலும் 2 சதவீதத்தினாலும் வீழ்ச்சியடைந்தன. அரசின் கொள்கையுடன் இசைந்து செல்லும் விதத்தில் விதை உற்பத்தி படிப்படியாக தனியார்துறைக்கு மாற்றல் செய்யப்பட்டது. வர்த்தக அடிப்படையில் உற்பத்தியை மேற் கொள்வதற்காக முன்னர் வேளாண்மைத் திணைக்களத்தினால் முகாமைப்படுத்தப்பட்ட பல விதைப் பண்ணைகள் தனியார்துறையிடம் ஒப்படைக்கப்பட்டன. அதேவேளை நியாயமான விலைகளில் உள்ளூர் உற்பத்தியாளர்களுக்கு மேற்தர விதை மூலப் பொருட்களைக் கிடைக்கச் செய்யும்பொருட்டு விதை மற்றும் பயிரிடல் மூலப் பொருட்களின் இறக்குமதிக்கு தீர்வையின்றிச் செய்யப்பட்டது. இதன் விளைவாக 1998இல் தனியார்துறையின் விதை இறக்குமதி குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தது. விதை உருளைக்கிழங்கின் இறக்குமதி 1,706 மெற்றிக் தொன்களுக்கு 52 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில் மரக்கறி விதைகளின் இறக்குமதி 186 மெற்றிக் தொன்களுக்கு 26 சதவீதத்தினால் அதிகரித்தது. அதிகரித்த இறக்குமதி காணப்பட்டபோதும் உற்பத்திச் செலவின் மிக உயர்ந்த விகிதம் காரணமாக விதை உருளைக்கிழங்கின் விலை உயர்வாகக் காணப்பட்டது.

1998இல் இரு புதிய வகைத் தக்காளி அதாவது வெப்பத்தைக் தாங்கக் கூடிய உயர் விளைச்சலைக்

கொண்ட, பக்டீரியா வாடல்களை எதிர்த்து நிற்கக் கூடிய பீ1, மற்றும் வேளாண்மையாளரின் விருப்பத்திற்கேற்ற அளவு, வடிவம், நிறங்களில் உற்பத்தி செய்யப்படும் பீஎல் 355 என்பன வேளாண்மைத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டன. மேலும் 1998 இல் குறைந்த சீனி இனிப்பைக் கொண்ட உருளைக் கிழங்கு வகை (வெள்ளைக் கண்ணெறுவா) டயஸ் கோறியா அலாட்டா கல்டிவர் கிழங்கு வகை (கிங்யாம்) மற்றும் வெளிநாட்டு இஞ்சிவகை (பிஜி) என்பனவும் வேளாண்மைத் திணைக்களத்தினால் வெளியிடப்படுவதற்கு இனங்காணப்பட்டன.

### வேளாண்மை இரசாயனங்கள்

1998இல் கிடைக்கத்தக்க தற்காலிக மதிப்பீடுகள் வேளாண்மை இரசாயனங்களின் (பூச்சிக் கொல்லி, களைக்கொல்லி, மற்றும் பங்கசுக்கொல்லி) விற்பனை அளவு 3 சதவீதத்தினால் அதிகரித்தமையை எடுத்துக் காட்டின. மொத்த வேளாண்மை இரசாயனங்களின் விற்பனையில் ஏறத்தாழ 46 சதவீதத்திற்கு வகைகூறும் களைக் கொல்லிகளின் அளவு 2,704மெற்றிக் தொன்களுக்கு 9 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்த வேளையில் பூச்சி கொல்லிகளின் விற்பனை 2,582 மெற்றிக்தொன்களுக்கு 20 சதவீதத்தினால் அதிகரித்தது. பங்கசுக் கொல்லிகளின் விற்பனை அளவு 574 மெற்றிக் தொன்களுக்கு 3 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது.

### கொடுகடன்

1998 இல் அனைத்தையும் உள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டத்தின் கீழ் வர்த்தக வங்கிகளினால் குறுங்காலப் பயிற்சி செய்கைக் கடன்கள் வழங்கப் பட்டன. உள்நாட்டு வேளாண்மையாளர்களுக்கான கொடுகடன் பாய்ச்சலை அதிகரிக்கும் நோக்குடன் அரசாங்கம் வட்டி உதவு தொகைக் கூறினை ஆண்டிற்கு 7.5 சதவீதத்திலிருந்து ஆண்டிற்கு 10 சதவீதத்திற்கு அதிகரித்தது. எனினும் புதிய அனைத்தையும் உள்ளடக்கிய கிராமிய கொடுகடன் திட்டத்தின் கீழ் 1997/98 பயிர்ச் செய்கையாண்டில் வழங்கப்பட்ட மொத்தக் கடன்கள் 1996/97 இன் ரூ.586 மில்லியனிலிருந்து ரூ.442 மில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தன. வழங்கப்பட்ட மொத்தக் கடனில் 62 சதவீதம் அதாவது ரூ.274 மில்லியன் 1997/98 பெரும்போகத்தில் வழங்கப்பட்ட வேளையில் மீதி ரூ.168 மில்லியனும் 1998 சிறு போகத்தில் வழங்கப்பட்டன. வழங்கப்பட்ட மொத்தக் கடன்களில் 63 சதவீதம் நெல் தொடர்பானதாக இருந்த வேளையில் மீதி துணை உணவுப் பயிர்த்துறைக் கானதாக இருந்தது.

முன்னைய ஆண்டினைப் போன்றே, இரு அரச வங்கிகளும் வழங்கப்பட்ட கடன்களில் மூன்றில் இரண்டு பங்கிற்கு வகைகூறின. பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களின் அளவு ரூ.82 மில்லியனிற்கு 8 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்ததுடன் பயிர்ச்செய்கையாண்டில் வழங்கப்பட்ட மொத்தக் கடன்களில் 19 சதவீதத்திற்கு வகை கூறின. 1998 சிறு போகத்தில் புதிய அனைத்தையும் உள்ளடக்கிய கொடுகடன் திட்டக் கடன்கள் மீதான வட்டிவீதம் ஆண்டிற்கு 16 சதவீதத்திலிருந்து ஆண்டிற்கு 12 சதவீதத்திற்கு குறைக்கப்பட்டது.

## 3.7 காடாக்கல்

பாதுகாப்பு செயற் பரப்பினைப் பெருமளவிற்கு வலியுறுத்துகின்ற விதத்தில் காடாக்கல் மற்றும் சுற்றாடல் அமைச்சு கொள்கை ஆய்வு மற்றும் வடிவமைப்பு, நீண்டகால துறைவாரியான திட்டமிடல், சட்டரீதியான ஆய்வு மற்றும் வடிவமைப்பு, துறை நடவடிக்கைகளைக் கண்காணித்தலும் இணைத்தலும், நன்கொடை உதவிகளுக்கு ஏற்பாடு செய்தல், காடாக்கம் மற்றும் அதனுடன் தொடர்பான நடவடிக்கைகளுக்குத் தேவையான மற்றைய உதவி நடவடிக்கைகளை வழங்குதல் போன்றவற்றுடன் அதன் நடவடிக்கைகளை தொடர்ந்தும் மேற்கொண்டது. மர வழங்கலுக்காக காடாக்கல் தோட்டங்களிலிருந்து காடழிக்கப்பட்ட பரப்பு (முழுமையாகத் தறிக்கப்பட்டது). 1998இல் 210 எக்டேயர் களாக இருந்தது. இவ்வாண்டில் காட்டுத்திணைக்களத் தினால் 57 எக்டேயர்கள் மீண்டும் காடாக்கப்படடது.

1998இல் பதிவு செய்யப்பட்ட காடுசார்ந்த வழக்குகளின் எண்ணிக்கை 1997 இன் 5,158 இலிருந்து 4193 இற்கு 19 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. எனினும் களவாக வெட்டப்படும் மரங்களின் அளவு 2589 கன மீற்றர்களுக்கு 4 சதவீதத்திற்கு அதிகரித்த வேளையில் பெறுமதி ஏறத்தாழ ரூ.30 மில்லியனுக்கு சிறிதளவால் அதிகரித்தது. களவாக காடழித்தலைக் கட்டுப்படுத்துவதற்காக மரங்களைக் கொண்டு செல்வதன் மீது மேற் கொள்ளப்பட்ட அதிகரித்த கண்காணிப்பும்கடுமையான ஒழுங்கு விதிகளும் தொடர்ந்தும் இருந்துவந்தன.

1998இல் சுற்றாடல் முகாமைத்துவத்தில் பல செயற்றிட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இங்குரான மற்றும் நக்கிள்ஸ் பாதுகாப்பு செயற்றிட்டங்கள் நோர்வே அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்திலிருந்தான ரூ. 35.9 மில்லியன் கொண்ட வெளிநாட்டு உதவியுடன் மேற் கொள்ளப்பட்டது. கண்டல் சதுப்பு நில படர் காடுகளின் பாதுகாப்புச் செயற்றிட்டத்திற்காக ரூ. 1 மில்லியன் வழங்கப்பட்டது. இவ்விரு செயற் திட்டங்களுக்குமாக வழங்கப்பட்ட நிதிகள் முழுமையாகப் பயன்படுத்தப்பட்டன. இச் செயற்றிட்டங்களின் கீழான நடவடிக்கைகள் பாதுகாப்புப் பிரதேசமுகாமைத்துவம் தாங்கு வலய முகாமைத்துவம் விரிவாக்கம் மற்றும் அறிவூட்டல்

அட்டவணை 3.10
காடாக்கல் துறை மீதான புள்ளி விபரங்கள்

| விடயம் | அலகு | 1996 | 1997 (அ) | 1998 (ஆ) |
|---|---|---|---|---|
| 1. மொத்தக் காட்டுத் தொகுதி உள்ளடக்கம் (இ) | '000 எக்டேயர்கள் | 2,119 | 2,119 | 2119 |
| முடப்பட்ட காடுகள் (ஈ) | '000 எக்டேயர்கள் | 1,583 | 1,583 | 1583 |
| பரந்த காடுகள் | '000 எக்டேயர்கள் | 464 | 464 | 464 |
| சதுப்பு நிலக் காடுகள் | '000 எக்டேயர்கள் | 8,687 | 8,687 | 8687 |
| 2. காடு அழிக்கப்பட்ட நிலப்பரப்பு (உ) | '000 எக்டேயர்கள் | 300 | 205 | 210 |
| 3. மீள் காடாக்கப்பட்ட பரப்பு | '000 எக்டேயர்கள் | 13,167 | 205 (ஊ) | 571 |
| 4. பதிவுசெய்யப்பட்ட காடு சார்ந்த குற்றங்களின் எண்ணிக்கை | எண்ணிக்கை | 5,014 | 5,158 | 4193 |
| கண்டுபிடிக்கப்பட்ட மரங்களின் அளவு | கன மீற்றர்கள் | 3,918 | 2,488 | 2589 |
| கண்டுபிடிக்கப்பட்ட மரங்களின் பெறுமதி | மில். ரூபா | 35.7 | 29.5 | 29.7 |

(அ) திருத்தியமைக்கப்பட்டது.
(ஆ) தற்காலிகமானவை.
(இ) கிட்டத்தட்ட 72,350 எக்டேயர்களைக் கொண்ட வளம்மிக்க வளர்ப்புக் காடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.
(ஈ) சதுப்பு நிலக் காடுகள் உட்பட.
(உ) மதிப்பீடுகள்.
(ஊ) பங்கேற்பு காடாக்கல் செயற்றிட்டத்தில் உள்ள பரப்புக்கள் நீங்காலாக.

மூலம்: காட்டுத் திணைக்களம்.

நிகழ்ச்சித் திட்டங்கள், பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் கட்டடங்கள், கட்டுமானம் மற்றும் வீதிகளின் பேணல் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தன. ஆசிய அபிவிருத்தி வங்கியும் அவுத்திரேலிய உதவியும் வழங்கியரூ.248.5 மில்லியன் கொண்ட தொகை முழுவதும் பங்கேற்புக் காடாக்கல் செயற்றிட்டத்திற்காக முழுமையாகப் பயன்படுத்தப்பட்டது. இச் செயற்றிட்டத்தின்கீழ் 1998 இல் 10.5 மில்லியன் நாற்றுக் கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டதுடன் காடு வளர்ப்புக்கள், வீட்டுவளாக அபிவிருத்தி (7,392 எக்டேயர்கள்) வேளாண்மை மரக் காணித்துண்டுகள் (2,540 எக்டேயர்கள்) பாதுகாப்பு மரக் காணித்துண்டுகள் (1,141 எக்டேயர்கள்) மற்றும் பலவகை மரப்பதனிடல் நிகழ்ச்சித் திட்டங்கள் (591 எக்டேயர்கள்) காணித்துண்டுகளிலும் (464 கி.மீ சாலை ஓரப் பயிரிடலாகவும்) பயிரிடப்பட்டதன் மூலம் அதிகரிக்கப் பட்டன.

இவ்வாண்டில் காடாக்கல் துறை முதன்மைத் திட்டத்தினது 5 ஆண்டு நிகழ்ச்சித் திட்டத்தின் நடைமுறைப்படுத்தலுக்காக தேசிய காடாக்கல் கொள்கையை வடிவமைப்பதிலும் சாத்தியமான ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியிடலுடன் முதலீட்டுச் செயற்றிட்டத்தினை தயாரிப்பதிலும் காட்டுத் திணைக்களம் ஈடுபட்டிருந்தது.